விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 04 செவ்வாய்க்கிழமை (16.02.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 059

## பொதுமக்களின் கொட்டகைகள் அடாத்தாக பிடுங்கி எறிவு

### ஏ9 வீதியை மறித்து பளையில் மக்கள் போராட்டம்



(பளை)
தாம் வசிக்கும் கொட்டகைகளை பொலிஸார் மற்றும் தென்னை பயிர்ச் 19

## கிளிநொச்சி புளியம்பொக்கணையில் குளிக்கச் சென்ற குடும்பஸ்தர் கிணற்றில் சடலமாக மீட்பு

(கிளிநொச்சி)
கிளிநொச்சி புளியம்பொக்கணை நாகேந்திரபுரம் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்று கிணற்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் வட்டக்கச்சியைச் சேர்ந்த 37 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் 19

## ஹெரோயினுடன் துன்னாலையில் ஒருவர் கைது

(கரணவாய்)
துன்னாலை வேம்படிச் சந்தியில் ஹெரோயினை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நெல்லியடி பொலிஸாரால் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் 19

## அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் விசேட சந்திப்பு

(கொழும்பு)
புதிய அரசியலமைப்பு உருவாக்கல் பணிகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள நிபுணர் குழுவை எதிர்வரும் சனிக்கிழமை சந் 19

## இலங்கையில் கட்சி தொடங்கி
# ஆட்சி செய்யப் போவதாக பா.ஜ.க தெரிவிப்பு

### சட்டரீதியான வாய்ப்புகள் இல்லை தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)
இலங்கையில் கட்சி தொடங்கி ஆட்சி செய்யப் போவதாக இந்தியாவின் பா.ஜ.க தெரிவித்துள்ள நிலையில், பாரதிய ஜனதா கட்சி அல்லது வேறு ஒரு வெளிநாட்டுக் கட்சிக்கும் இலங்கையில் பதிவினை பெறுவதற்கும் அல்லது தேர்தலில் போட்டியிடுவதற்கும் சட்டரீதியான வாய்ப்புகள் இல்லை என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் நிமல் புஞ்சிஹேவா இதனைத் தெரிவித்துள்ளார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் 6 பேருக்கு கொரோனா உறுதி

(யாழ்ப்பாணம்)
யாழ். ஆய்வுகூடங்களில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் நேற்றைய தினம் மேலும் வடக்கு மாகாணத்தை சேர்ந்த ஆறு பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப் 19

## இலங்கையில் கொரோனாவால் 14 நாட்களில் 74 பேர் பலி

(கொழும்பு)
இலங்கையில் கொரோனா வைரஸால் கடந்த 14 நாட்களில் மாத்திரம் 74 பேர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், கொரோனா வைரஸ தாக்கத்தின் மூன்றாவது அலையால் கடந்த ஒக்ரோபர் 4ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரை 384 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொரோனாவின் முதலாம், இரண்டாம் 19

## 400ஐ தாண்டிய பலியெடுப்பு
### மேலும் 6 பேர் உயிரிழப்பு
### நேற்றும் +774 தொற்றாளர்கள்

(கொழும்பு)
நாட்டில் கோவிட் - 19 நோயால் மேலும் 6 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைகளம் நேற்று திங்கட்கிழமை அறிவித்துள்ளது.

இதன்மூலம் நாட்டில் கோவிட் - 19 நோயால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 403ஆக உயர்வடைந்துள்ளது.

அத்துடன், நாட்டில் நேற்று +774 பேர் 19

## கொரோனா தடுப்பூசி பொதுமக்களுக்கு வழங்கும் பணி ஆரம்பம்

(கொழும்பு)
இலங்கையில் கொரோனா தடுப்பூசியை பொது மக்களுக்கு வழங்கும் 19

## அயல் வீட்டாரின் சண்டையை தீர்க்கச் சென்றவர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு
### வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)
வவுனியா ஈச்சங்குளம் பகுதியில் கிணற்றிலிருந்து குடும்பஸ்தர் 19

## வெளிநாட்டிலிருந்து வந்தவர்களிடமே உரு திரிபடைந்த வைரஸ் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது

(கொழும்பு)
உரு திரிபடைந்த கோவிட்-19 தொற்றுறுதியானவர்களில் பெரும்பாலானோர் வெளிநாடுகளிலிருந்து இலங்கை வந்துள்ளதால் நாட் 19

## பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இன்று தடுப்பூசி

9ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**NOTICE**

**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**
**OPERATIONAL TECHNICAL SECRETARIAT (OTS)**
**WORLD BANK FUNDED ACCELERATING HIGHER EDUCATION EXPANSION AND DEVELOPMENT (AHEAD) OPERATION**

**POST OF PROJECT ASSISTANT (FULL TIME) – ON CONTRACT BASIS -01**

**ELTA ELSE – FACULTY LEVEL DEVELOPMENT PROJECT – FACULTY OF AGRICULTURE**

The University of Jaffna, Sri Lanka will entertain applications for the above mentioned post under OTS – AHEAD Operation from suitably qualified persons up to 25.02.2021.
The Post carries all inclusive monthly salary of Rs.42,800/= in addition applicable EPF & ETF will be paid.

Applicants are requested to visit Jaffna University Website www.jfn.ac.lk for further details.

**Registrar**

(C-1444)

# கொரோனா வைரஸ்
# அம்பலாங்கொட நகரசபை உறுப்பினர் மரணம்

(கொழும்பு)

கொரோனாத் தொற்றிற்குள்ளாகிய நிலையில் சிகிச்சை பெற்றுவந்த அம்பலாங்கொட நகரசபை உறுப்பினர் தனசேன மதுவகே நேற்று காலமானார்.

அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

இலங்கை சுதந்திரக்கட்சி உறுப்பினரான அவர், கொரோனாத் தொற்றினால் உயிரிழந்த முதலாவது உள்ளூராட்சிசபை உறுப்பினராவார்.(ம-03)

**PEARSON** INTERNATIONAL COLLEGE

Diploma in English
IELTS Acadamic
IELTS General
IELTS Life skills.

# Weekday classess
# Weekend Classess
# Personal Classes
# Group Classes
# Lecturers are above band 8 Scorers and professionally qualified

(5417)

98% Students In IELTS Scored above 6.5
Learn the techiniques to score above 6.0
Unbeatable Success rate in Northern Province

Registered Exam Centre for IELTS
Special discounts for upcoming registration
074 188 7878 infopearsonicollege@gmail.com
idp IELTS

No.21,Ponnampalam Street 3rd lane, Power house road, Jaffna

# INVITATION FOR BIDS (IFB)
# TEACHING HOSPITAL, JAFFNA

1. Sealed bids for the supply of the under mentioned Category will be received by Chairman, Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna.

| S. No | Item Code | Non-Refundable tender fee (Rs.) | Supply, Installation, Maintenance & Commissioning of | Bid Security |
|---|---|---|---|---|
| 1. | JTH/SA/P1/STATION/2021 | 1000.00 | Supply of Stationery Items | |
| 2. | JTH/SA/P7/BATTERY/2021 | 1000.00 | Supply of Battery Item | 100,000.00 |
| 3. | JTH/SA/P13/TONER/2021 | 1000.00 | Supply of Toners | |
| 4. | JTH/SA/P6/GAR.BAG/2021 | 1000.00 | Supply of Garbage Bags & Shoes | |
| 5. | JTH/SA/P11/WASHING MATER/2021 | 1000.00 | Supply of Washing Materials | 100,000.00 |
| 6. | JTH/SA/P8/HAND TISSUE/2021 | 1000.00 | Supply of Hand Tissue & Tissue Dispenser | |
| 7. | JTH/SA/P12/BATTERY/2021 | 1000.00 | Supply of Rexene& Mackintosh | |
| 8. | JTH/SA/P10/PAINT/2021 | 1000.00 | Supply of Painting Item | |
| 9. | JTH/SA/P2/WKSP& HARD/2021 | 1000.00 | Supply of Building & Workshop Items | 100,000.00 |
| 10. | JTH/SA/P3/WATER SUPPLY /2021 | 1000.00 | Supply of Water Supply Items | |
| 11. | JTH/SA/P4/ELECTRICAL/2021 | 1000.00 | Supply of Electrical Items | |
| 12. | JTH/SA/P5/TYRE/2021 | 1000.00 | Supply of Tyre& Tube | 50,000.00 |
| 13. | JTH/SA /P9/CLO.MAT/2021 | 1000.00 | Supply of Cloth Material | 50,000.00 |
| 14. | JTH/SA2 /P1/OFF-FUR/2021/01 | 1000.00 | Supply of Office Furniture | |
| 15. | JTH/SA2/P2/OFF-EQU/2021/01 | 1000.00 | Supply of Office Equipment | 100,000.00 |
| 16. | JTH/SA2/P3/COM-ACC/2021/01 | 1000.00 | Supply of Computer Accessories | |

2. Bidding will be conducted through the National Competitive Bidding (NCB) method
3. Only the sole nominated representative / accredited agent of manufactures Offered for the Sri Lanka market are eligible to participate in this bid.
4. Sealed bids should be made on a complete set of bidding documents for the project in original shall be sent by the Registered Post or shall be deposited in the tender box addressed to the Chairman, Regional Procurement Committee, and Teaching Hospital Jaffna on or before **10.00 am on 3rd of March, 2021.**
5. Bid documents should be obtained from Accountant, at the above address from **03.02.2021 to 02.03.2021** between 9.00 am and 3.00 pm during working days on submission of the following.
   a) A written application to the Chairman, Regional Procurement Committee, Teaching Hospital Jaffna.
   b) Certificate of Business Registration (Certified Photocopy)
   c) Upon payment of the non-refundable tender fee stated above in cash to the Director Teaching Hospital, Jaffna.
6. All bids must be accompanied by a Bid-Security amounting to LKR mentioned in the bid projects table / document for each projects by cash or bank bond and the validity period until **30.06.2021 (119 days)** from deadline of the bid.
7. Bids will be opened immediately after the closing of bids at the office of the Chairman / Director, bidders or their **representatives** permitted to be present when bids are opened.
8. Bid Documents may be inspected free of charge at the Procurement Division in Our Hospital.
9. Further information could be obtained from Accountant TH /Jaffna **(Tel - 021 222 3149 / 021 221 2482)**

**Director / Chairman.**
**RPC/Teaching Hospital, Jaffna.**
**30.01.2021**

(C-1442)

## மன்னார் நீதிமன்றில்
# மணிவண்ணனுக்கு எதிராக வழக்கு

(மன்னார்)

பொத்துவில் முதல் பொலிகண்டி வரை இடம்பெற்ற மக்கள் எழுச்சிப் பேரணியில், நீதிமன்ற கட்டளையை மீறி பங்கேற்றதாக, யாழ்ப்பாணம் மாநக்ர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணனுக்கு எதிராக மன்னார் நீதவான் நீதிமன்றில், பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த வழக்கு பதில் நீதிவான் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு தவணையிடப்பட்டுள்ளது.

ஆரம்பத்திலேயே பேரணிக்கு தடைகோரி ஏ அறிக்கையூடாக மனனார் பொலிஸ் நிலையத்தினால் தொடரப்பட்ட வழக்கிற்கு நீதிமன்று வழங்கிய தடை உத்தரவு மீறப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, 'பி' அறிக்கை ஊடாக பேரணியில் கலந்து கொண்ட யாழ்ப்பாணம் மாநகர முதல்வருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த வழக்கில் யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணன் மாத்திரமே பிரதிவாதியாக பெயரிடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-3.33)

## மோறா வகை
# மீன் பிடித்த மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

மோறா வகை மீன் பிடித்த நீர்கொழும்பு மீனவர்கள் மூவர் நேற்று முன்தினம் காங்கேசன்துறை கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த மீன் இனமானது பிடிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் நூறு கிலோவிற்கும் அதிகமான மீன் பிடித்தமையால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இது தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (ம-3.104)

# விடுதலைப்புலிகள் யுத்தத்தில் வெற்றி பெற்றிருந்தால் நாட்டில் பௌத்த சாசனம் முற்றாக அழிந்திருக்கும்

## பாதுகாத்துவிட்டோமென வீரசேகர பெருமிதம்

(கொழும்பு)

**விடுதலைப் புலிகள் அமைப்பு யுத்தத்தில் வெற்றி பெற்று நாடு பிரிக்கப்பட்டிருந்தால் பௌத்த சாசனம் முற்றாக அழிக்கப்பட்டிருக்கும் எனப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஒருமித்த நாட்டின் கொள்கையினை மாணவர்களுக்கு ஆரம்ப காலத்தில் இருந்து கற்றுக் கொடுக்க வேண்டும். நாட்டின் இறையாண்மை, சுயாதீனத்தன்மை ஆகியவை குறித்து இளம் தலைமுறையினர் அதிக அக்கறை கொள்ள வேண்டும். பாரிய போராட்டத்திற்கு மத்தியில் நாடு பாதுகாக்கப்பட்டுள்ளது.

தற்போதைய இளம் சந்ததியினர் நாடு குறித்து பற்று இல்லாமல் செயற்பட்டால் எதிர்காலத்தில் பிரிவினைவாதம் நாட்டை பிளவுபடுத்தும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை கூட்டத்தொடரில் இம்முறை இலங்கைக்கு ஆதரவாக 47 இற்கும் அதிகமான நாடுகள் ஒன்றிணைந்து செயற்படவுள்ளன.

நல்லாட்சி அரசாங்கம் நாட்டை அரசியலமைப்பின் ஊடாக பிளவுபடுத்த பல நடவடிக்கைகளை முன்னெடுத்தது. அதற்கு நாங்கள் இடமளிக்கவில்லை.

ஒற்றையாட்சி நாட்டுக்குள் ஒரு சட்டம் மாத்திரமே செயற்படுத்தப்பட வேண்டும். அனைத்து இன மக்களும் பொதுச்சட்டத்திற்கு அடிபணிய வேண்டும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு நல்லாட்சி அரசாங்கம் இணையனுசரணை வழங்க இணக்கம் தெரிவித்தமை தேசத்துரோகச் செயற்பாடாக கருதப்படும்.

இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட பிரேரணைக்கு இலங்கை அரசாங்கம் சார்பாக செயற்பட்டமையினால் மனித உரிமை பேரவையின் உறுப்பு நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக செயற்படவில்லை.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் 30/1 பிரேரணையில் இருந்து அரசாங்கம் உத்தியோகபூர்வமாக விலகியது.

நாட்டுக்கு எதிரான பிரேரணைகளுடன் இணைந்திருக்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்குக் கிடையாது என வீரசேகர தெரிவித்தார். (நி-4)


## வவுனியா வளாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### 35வது பொதுப்பட்டமளிப்பு வைபவம் - 2021

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35வது பொதுப்பட்டமளிப்பு வைபவம் மாசி மாதம் 24ம் மற்றும் 25ம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டு அரங்கில் 06 அமர்வுகளாக நடைபெறும்.

இப்பட்டமளிப்பு வைபவத்தில் வவுனியா வள்ாகத்தின் மூலம் பட்டம் பெறுவோருக்கு கீழ்க் குறிப்பிட்ட திகதிகளில் பட்டமளிப்பு அங்கிகள் பூங்கா வீதி, வவுனியாவில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் பரீட்சைகள் மற்றும் மாணவர் அனுமதிகள் கிளையில் பெற்றுக்கொள்ள முடியும். பட்டமளிப்பு வைபவத்திற்கான அங்கிகளைப் பெற்றுக் கொள்ளும் போது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடியதான பல்கலைக்கழக அடையாள அட்டை அல்லது தேசிய அடையாள அட்டையினைக் காண்பித்தல் வேண்டும்.

தமக்காக குறித்தொதுக்கப்பட்ட பட்டமளிப்பு அமர்வு விபரங்களையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வி விவகாரங்கள் மற்றும் வெளியீட்டுக் கிளையின் அறிவித்தல் பலகையிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளத்திலும் பார்வையிடலாம். முகவரி www.jfn.ac.lk

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகம்

| திகதி | நேரம், இடம் | பட்டம் |
|---|---|---|
| 22.02.2021<br>23.02.2021<br>24.02.2021 | 09.00 மு.ப – 4.00 பி.ப<br>பரீட்சைகள் மற்றும் மாணவர் அனுமதிகள் கிளை,பூங்கா வீதி, வவுனியா | • தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமாணி (பொது)<br>• தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் விஞ்ஞானமாணி (சிறப்பு)<br>• சூழல் விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி (பொது)<br>• சூழல் விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி (சிறப்பு)<br>• விஞ்ஞானமாணி (பிரயோக கணிதமும் கணிப்பிடலும்) (பொது)<br>• கணனி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி (சிறப்பு)<br>• வியாபார முகாமைத்துவ மாணி (பொது)<br>• வியாபார முகாமைத்துவ மாணி (சிறப்பு)<br>• செயற்திட்ட முகாமைத்துவத்தில் வியாபார முகாமைத்துவ மாணி (பொது) |

**குறிப்பு:**

1) பட்டதாரி மாணவர்கள் தொழில் பெறு இயலுமைக்கான கேள்விக் கொத்தினைப் பெற்று, முறையாகப் பூரணப்படுத்தி பட்டமளிப்பு அங்கிகளைப் பெறுவதற்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும். (கேள்விக் கொத்தினை பல்கலைக்கழக இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யமுடியும்: www.jfn.ac.lk)

2) பல்கலைக்கழகத்திற்கு வரும் பட்டதாரிகள் கொவிட் சுகாதார நடைமுறைகளை பின்பற்றுதல் கட்டாயமானது.

(C-1443) **பதிவாளர்**


## க.பொ.த.சாதாரண தரப்பரீட்சை மேலதிக வகுப்புக்களுக்குத் தடை

(கொழும்பு)

கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை மாணவர்களுக்கான மேலதிக வகுப்புக்கள், கருத்தரங்குகள், செயலமர்வுகள் ஆகியவற்றை நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, எதிர்வரும் 23 ஆம் திகதி நள்ளிரவு முதல் இந்த தடை அமுல்படுத்தப்படவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## புதிய வகை கொரோனா அச்சம் பயணக்கட்டுப்பாடு விதிக்க நடவடிக்கை

(கொழும்பு)



புதிய வகை கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்கள் வசிக்கும் பகுதிகளில் பயணங்களை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கொவிட்-19 தொற்றுத் தொடர்பிலான இராஜாங்க அமைச்சர் மருத்துவர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

குறித்த பகுதிகளுக்கு வெளியே வைரஸ் பரவுவதை குறைப்பதற்காக பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டும் என அவர் தெரிவித்தார்.

புதிய வகை கொரோனா வைரஸ் வேகமாக பரவுகின்றமை அடையாளம் காணப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய நிலைமையின் கீழ் பொதுமக்கள் பாதுகாப்புடன் நடந்துகொள்வது அவசியம் என விசேட வைத்திய நிபுணர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

பிரித்தானியாவில் வேகமாக பரவிவரும் புதிய வகை கொரோனா வைரஸ், கொழும்பு, அவிசாவளை, வவுனியா மற்றும் பியகம ஆகிய பகுதிகளில் அடையாளம் காணப்பட்டுள்ளதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் வைத்தியர் சந்திம ஜீவந்தர கடந்த வாரம் தெரிவித்திருந்தார். (நி-4)

# நெஞ்சுக்குள் அச்சம் இல்லை யாருக்கும் பயமும் இல்லை வாராதோ வெற்றி என்னிடம்...

## ●அஷ்வின் துணிச்சல் சதம்

## ●வெற்றி மிதப்பில் இந்தியா




சதமடித்து கெத்து காட்டும் ரவி அஷ்வின்

சென்னை டெஸ்டில் 'சகலதுறை வீர ராக' அசத்தினார் தமிழகத்தின் அஷ் வின். முதலில் பந்துவீச்சில் பட்டையை கிளப்பிய இவர், நேற்று துடுப்பாட்டத்தில் மன்னனாக ஜொலித்தார். சவாலான ஆடுகளத்தில் துணிச்சலாக ஆடி சதம் கடந்தார். இவரது அபார ஆட்டம் கைகொடுக்க, இந்திய அணி வெற்றியை நோக்கி முன்னேறுகிறது.

இந்தியா சென்றுள்ள இங்கிலாந்து அணி, நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்டில் தோற்ற இந்தியா, 0-1 என, பின்தங்கி உள்ளது.

இரண்டாவது டெஸ்ட், சென்னை, சேப்பாக்கம் மைதானத்தில் நடக் கிறது. முதல் இன்னிங்ஸில் இந் தியா 329, இங்கிலாந்து 134 ஓட் டங்கள் எடுத்தன. இரண்டாம் நாள் முடிவில், இரண்டாவது இன் னிங்சில் இந்திய அணி, ஒரு விக் கெட்டை இழந்து 54 ஓட்டங்களை எடுத்திருந்தது.

### விக்கெட் சரிவு

மூன்றாம் நாள் ஆட்டத்தில் புஜாரா (7) 'ரன்-அவுட்' ஆகி ஏமாற்றினார். ஜாக் லீச் 'சுழலில்' ரோகித் சர்மா (26), ரிஷாப் பண்ட் (8) வெளியேறினர். ரகானே (10), அக்சர் படேல் (7) நிலைக்கவில்லை. இந்திய அணி 106 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளை இழந்து திணறியது.

### ஹோலி அரைசதம்

பின் அணித் தலைவர் விராட் ஹோலி, அஷ்வின் ஜோடி இங்கிலாந்து பந்து வீச்சை எளிதாக சமாளித்தது. ஹோலி, டெஸ்ட் அரங்கில் 25ஆவது அரைசத மடித்தார். ஸ்டோன் பந்தை பவுண்டரி க்கு விரட்டிய அஷ்வின், 64 பந்துகளில் 50 ஓட்டங்களை எட்டினார். ஏழாவது விக்கெட்டுக்காக 96 ஓட்டங்கள் சேர்த்த போது மொயீன் அலி பந்தில் ஹோலி (62) ஆட்டமிழந்தார்.

### அஷ்வின் அபாரம்

கடைசி வரை அஷ்வின் நம்பிக்கை கொடுத்தார். மொயீன் அலி வீசிய 82 ஆவது ஓவரில் ஒரு சிக்சர், ஒரு பவுண் டரி அடித்த இவர், டெஸ்ட் அரங்கில் 5ஆவது சதத்தை பதிவு செய்தார். ஜாக் லீச் பந்தில் சிராஜ் 2 சிக்சர் பறக்கவிட்டரர். கடைசி விக்கெட்டுக்கு 49 ஓட்டங்கள் சேர்த்த நிலையில், ஸ்டோன் பந்தில் அஷ்வின் (106) போல்டானார். இரண்டா வது இன்னிங்ஸில் இந்திய அணி 286 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களை யும் இழந்தது. சிராஜ் (16) ஆட்டமிழக் காமல் இருந்தனர்.

### கடின இலக்கு

பின் களமிறங்கிய இங்கிலாந்து அணி க்கு 482 ஓட்டங்கள் என்ற கடின இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அக்சர் படேல் 'சுழ லில்' சிப்லே (3) சிக்கினார். அஷ் வின் பந்தில் பேர்ன்ஸ் (25) ஆட்டமிழந்தார். 'நைட் வாட்ச்மேனாக' வந்த ஜாக் லீச் (0), அக்சர் படேலிடம் சரணடைந்தார்.

இந்நிலையில் நேற்றைய மூன்றாம் நாளாட்டம் நிறைவுக்குவர இரண்டாவது இன்னிங்ஸில் இங்கிலாந்து அணி 3 விக்கெட்டுக்களை இழந்து 53 ஓட்டங் களை எடுத்து, 429 ஓட்டங்களால் பின் தங்கி இருந்தது.

லோரன்ஸ் (19), அணித் தலைவர் ஜோ ரூட் (2) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

### நழுவிய பிடி

பிரோட் வேகத்தில் அஷ்வின், 28, 56 ஓட்டங்கள் எடுத்திருந்த போது கொடுத்த 2 பிடி வாய்ப்புகளை முறையே பென் ஸ்ரோக்ஸ், விக்கெட் காப்பாளர் போக்ஸ் வீணடித்தனர். இதனை பயன்படுத்திக் கொண்ட அஷ்வின் சதம் விளாசினார்.

### மூன்றாவது முறை

இரண்டாவது டெஸ்டின் முதல் இன்னிங்சில் பந்துவீச்சில் 5 விக்கெட் வீழ்த்திய இந்திய சுழல்' வீரர் அஷ்வின், துடுப்பாட்டத்தில் 106 ஓட்டங்களை விளாசினார். இவர், 3ஆவது முறையாக, ஒரு டெஸ்டில் 5 அல்லது அதற்கு மேல் விக்கெட் வீழ்த்தி, சதம் கடந்தார். இதன்மூலம் டெஸ்ட் அரங்கில் இப்படி சாதித்த வீரர்கள் வரிசையில் 2ஆவது இடம்பிடித்தார் அஷ்வின். முதலிடத்தில் இங்கிலாந்தின் இயன் பொத்தம் (5 முறை) உள்ளார். மே.தீவுகளின் ஹரி சோபர்ஸ், பாகிஸ்தானின் முஷ்தாக் முகமட், தென்னாபிரிக்காவின் கலிஸ், பங்களாதேஷின் சகிப் அல் ஹசன் தலா 2 முறை இப்படி சாதித்திருந்தனர்.

◈ இந்தியா சார்பில் இதுவரை 3 பேர் இப்படி சாதித்தனர். ஏற்கெனவே வினு மன்கட் (1952, எதிர்: இங்கிலாந்து, இடம்: லோர்ட்ஸ், 184, 72 ஓட்டங்கள், 5 விக்கெட்), பாலி உம்ரிகர் (எதிர்: மே. தீவுகள், இடம்: போர்ட் ஒப் ஸ்பெயின், 172, 56* ஓட், 5 விக்கெட்) தலா ஒரு முறை இப்படி சகலதுறை வீரராக' அசத்தினர்.

# கிண்ணம் வென்றது பாக்.




தென்னாபிரிக்காவுக்கு எதிரான 3ஆவது 'ரி20' போட்டியில் அசத்திய பாகிஸ்தான் அணி 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதனையடுத்து பாகிஸ் தான் அணி 2-1 என்ற கணக்கில் கைப் பற்றி கிண்ணத்தை வென்றது.

பாகிஸ்தான் சென்ற தென்னாபிரிக்க அணி, மூன்று போட்டிகள் கொண்ட 'ரி20' தொடரில் பங்கேற்றது. முதலிரண்டு போட்டி களின் முடிவில் தொடர் 1-1 என்ற கணக் கில் சமநிலையில் இருந்தது.

மூன்றாவது போட்டி நேற்று முன் தினம் லாகூரில் நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற பாகிஸ் தான் அணியின் தலைவர் பாபர் ஆசம், களத்தடுப்பை தேர்வு செய்தார்.

தென்னாபிரிக்க அணிக்கு ரீசா ஹென் டிரிக்ஸ் (2), ஸ்முட்ஸ் (1), அணித் தலை வர் ஹெய்ன்ரிச் கிளாசன் (0) ஏமாற்றி னர். ஜேன்மேன் மாலன் (27), பைட் வான் பில்ஜோன் (16) நிலைக்கவில்லை.

இதன் தாக்கத்தால் தென்னாபிரிக்கா அணிஒரு கட்டத்தில் 6 விக்கெட்டுக்களை வெறும் 48 ஓட்டங்களுக்கு இழந்து தள் ளாடியது.

நிலைமையை உணரந்து அபாரமாக ஆடிய டேவிட் மில்லர், 45 பந்துகளில் 7 சிக்சர்கள், 5 பவுண்டரிகள் அடங்கலாக 85 ஓட்டங்கள் விளாசி அணியின் மொத்த ஓட்ட எண்ணிக்கைக்கு உதவினார்.

இதனால் தென்னாபிரிக்க அணி ·20 ஓவர்களில், 8 விக்கெட்டுக்களை இழந்து 164 ஓட்டங்கள் எடுத்தது.

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய பாகிஸ் தான் அணிக்கு ஹைதர் அலி (15) சுமா ரான ஆரம்பம் கொடுத்தார். மொஹமட் ரிஸ்வான் (42), அணித் தலைவர் பாபர் ஆசம் (44) நம்பிக்கை அளித்தனர். பின் இணைந்த முகமது நவாஸ் (18*), ஹசன் அலி (20*) அணியை வெற் றிக்கு அழைத்துச் சென்றனர்.

பாகிஸ்தான் அணி 18.4 ஓவர்களில், 6 விக்கெட்டுக்களை இழந்து 169 ஓட் டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. ஆட்ட நாயகன் விருதை மொஹமட் நவாஸ் (பாக்.,), தொடர் நாயகன் விருதை மொஹ மட் ரிஸ்வான் (பாக்.,) கைப்பற்றினர்.

### 100ஆவது வெற்றி

தென்னாபிரிக்காவை வீழ்த் திய பாகிஸ்தான் அணி, சர்வதேச 'ரி20' அரங்கில் 100ஆவது வெற்றியை பதிவு செய்த முதல் அணி என்ற பெருமை பெற்றது. இதுவரை விளை யாடிய 164 போட்டிகளில், 100 வெற்றி, 59 தோல்வியை பெற்றது. மூன்று போட்டிகள் சமனிலை ஆனது. இரண்டு போட்டிகளுக்கு முடிவு இல்லை.

சர்வதேச 'ரி20' வரலாற்றில் அதிக வெற்றிகளை பதிவு செய்த அணி களுக்கான பட்டியலில் இரண்டாவது இடத்தில் இந்தியா (85 வெற்றி, 137 போட்டி) உள்ளது.

# காலிறுதியில் நடால்



ரபேல் நடால்

அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரின் காலிறு திக்கு ஸ்பெயினின் நடால் முன்னேறினார்.

அவுஸ்திரேலிய ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர் மெல்போர்னில் நடக்கிறது.

நேற்று நான்காவது சுற்று போட்டிகள் நடந்தன. 'நம்பர் 2' இடத்திலுள்ள ஸ்பெயினின் நடால், இத்தாலியின் பேபியோ பாக்னினியை எதிர்கொண்டார். முதல் இரு செட்களை 6-3, 6-4 என கைப்பற்றினார் நடால். தொடர்ந்து அசத்திய இவர் அடுத்த செட்டையும் 6-2 என வசப்படுத்தினார். முடிவில் நடால் 6-3, 6-4, 6-2 என்ற நேர் செட்களில் வெற்றி பெற்று காலிறுதிக்குள் நுழைந்தார்.

ரஷ்யாவின் மெத்வெடேவ், அமெரிக்கா வின் மெக் டொனால்டை 6-4, 6-2, 6-3 என்ற நேர் செட்களில் வெற்றி பெற்று காலிறு திக்க முன் னேறினார். ரஷ்யாவின் ரூபலெவ், 6-2, 7-6 என முன்னணியில் இருந்த போது, நோர்வேயின் ரூடு விலகிக் கொள்ள, ரூபலெவ் காலிறுதிக்கு தகுதி பெற்றார்.

### ஆஷ்லே அபாரம்

பெண்கள் ஒற்றையர் பிரிவில் அவுஸ்திரேலியா வின் ஆஷ்லே பார்டி, அமெரிக்காவின் ரோஜர்சை 6-3, 6-4 என்ற நேர் செட்கணக்கில் வென்று காலிறுதிக்குள் நுழைந்தார். செக்குடி யரசின் முசோவா 7-6, 7-5 என பெல்ஜியத்தின் மெர்டென்சை போராடி வீழ்த்தினார். அமெரிக்காவின் பார்டி, குரோஷியா வின் வெகிச்சை 6-1, 7-5 என்ற கணக்கில் வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார்.

# வடக்கு - கிழக்கு உட்பட நாடளாவிய ரீதியில்

# 10 இலட்சம் பேருக்கு பிறப்புச்சான்றிதழ் இல்லை

**(கொழும்பு)**

**வடக்கு-கிழக்கு உட்பட நாடளாவிய ரீதியில் 10 இலட்சம் பேருக்கு பிறப்புச்சான்றிதழ் இல்லை என்பது ஆய்வின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.**

நாட்டிலுள்ள 25 மாவட்டங்களிலும் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட ஆய்வின்மூலம் இந்த விடயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பொது நிர்வாக அமைச்சின் மேலதிக செயலாளர் என்.சி.விதானகே இதனைத் தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்டத்தில் மாத்திரம் பிறப்புச் சான்றிதழ் இல்லாத 80 ஆயிரம் பேர் உள்ளமை, இந்த ஆய்வில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் கொழும்பு மாவட்டத்தில் குடிசைகளில் வாழும் சுமார் 50 ஆயிரம் பேருக்கு பிறப்புச் சான்றிதழ் கிடையாது எனவும் அவர் தெரிவித்தார்.

மலையகம், வடக்கு, கிழக்கில் வாழும் பெரும்பாலானோர் இந்தப் பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறைந்த வயதில் திருமணமாகி, பிறக்கும் குழந்தைகளுக்கு பிறப்புச் சான்றிதழ் பெறாமை, போதிய தெளிவின்மை உள்ளிட்ட விடயங்களினால் பிறப்புச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளாதுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-4)


## வேலையாட்கள் தேவை

கொழும்பில் இயங்கி வரும் யாழ்.ஐஸ்கிறீம் மற்றும் யாழ்.அசைவ உணவகம் ஒன்றிற்கு கீழ்க்காணும் வேலைக்கு ஆட்கள் தேவை. தங்கியிருந்து வேலை செய்யக் கூடிய ஆண்/பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்.

- ஐஸ்கிறீம் மற்றும் ஜூஸ் வகைகள் வேலை தெரிந்தோர். அனுபவத்திற்கும் திறமைக்கும் ஏற்ப 30,000/= +கூடுதல் நேர கொடுப்பனவு.
- யாழ்.வகை அசைவ உணவுகள் நன்கு சமைக்கத் தெரிந்தவர்கள் திறமைக்கு ஏற்ப 45,000/= +கூடுதல் நேர கொடுப்பனவு.
- மோட்டார் சைக்கிள்/ஆட்டோ ஓடக்கூடிய உதவியாளர்கள். 30,000/= +மேலதிக நேர கொடுப்பனவு.

**உடன் தொடர்பு கொள்ளவும்:-**
**ராஜன் - 076 886 6972**

(5676)


## பொருளாதார நெருக்கடிக்குள் இலங்கை

## அமைச்சர் ஆரூடம்

(கொழும்பு)

அடுத்துவரும் சில மாதங்கள் இலங்கைக்கு பொருளாதார ரீதியில் நெருக்கடியான காலமாக இருக்கும் என்று நிதி, மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக ஏற் பட்டுள்ள பின்னடைவிலிருந்து நாடு இன்னமும் மீண்டு வந்து கொண்டிருக் கின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஒவ்வொரு ஆண்டும் 4 இலட்சம் புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்க வேண்டியுள்ளன எனத் தெரிவித்த அவர், அதற் காகத் தாம் செயற்படுவதாகவும் இதன் காரணமா கவே தாம் புதிய முதலீட்டா ளர்களைக் கொண்டு வருவதாகவும் அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் மேலும் தெரிவித்தார். (நி-4)


41 ஆம் நாள்
நினைவஞ்சலியும்
நன்றி நவிலலும்

அமரர். திருமதி
ஜீவநாயகி
சுப்பிரமணியம்



மண்ணில் 1956.07.23

விண்ணில் 2021.01.08

யாழ்ப்பாணம் கொக்குவிலைப் பிறப்பிடாகவும் 74/56 சிங்கள பிரதேச செயலக ஒழுங்கை, மன்னார் வீதி, வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.ஜீவநாயகி சுப்பிரமணியம் 08.01.2021 வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார். அன்னாரின் துயரச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி மூலமும் தொடர்பு கொண்டு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். 16.02.2021 இன்று செவ்வாய்க்கிழமை கீரிமலையில் அந்தியேட்டி கிரியையும் 17.02.2021 நாளை புதன்கிழமை அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் 41 ஆம் நாள் ஆத்ம சாந்தி கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். (C-1441)

வவுனியா. T.P: 077 4617540 குடும்பத்தினர்.


## ஒரு வாரம் கற்றல் விடுமுறை




(கொழும்பு)

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்கு முகங்கொடுக்கவுள்ள மாணவர்களுக்கு ஒருவார கற்றல் விடுமுறை வழங்குமாறு கல்வியமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேராவினால் அனைத்து மாகாண, வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

2020 டிசெம்பரில் இடம்பெறவிருந்த க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி முதல் 11 ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது.

இந்நிலையில் அதற்கு முகங்கொடுக்கும் மாணவர்களுக்கு எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் பெப்ரவரி 25 வரையில், கல்வி கற்பதற்காக விடுமுறை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கல்வியமைச்சின் செயலாளர் அறிவுறுத்தியுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்போது, பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான பரீட்சை அனுமதிப் பத்திரங்களை வழங்கும்போது, கற்றல் விடுமுறைக்கு பாதிப்பை ஏற்படாதவாறு செயற்படுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-4)

## பிரசாந்தனின் விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச்செயலாளர் பூ.பிரசாந்தனின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் இது தொடர்பான வழக்கு நேற்று சூம் தொழில்நுட்பம் ஊடாக நடைபெற்றது.

இதன்போது பிரசாந்தனை எதிர்வரும் மார்ச் 01 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைப்பதற்கான உத்தரவினை விடுத்தார்.

ஆரையம்பதியில் 2008 ஆம் ஆண்டு இடம்பெற்ற இரட்டைப்படுகொலை தொடர்பில், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த அவர், ஏற்கனவே பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த வழக்கின் சாட்சியங்களை அச்சுறுத்தினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைக்கு அமைய பிரசாந்தன் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# கீரிமலையில் சிவபூமி முதியோர் இல்லம் விரைவில் திறக்கப்படும்

## கலாநிதி ஆறு.திருமுருகன்

(யாழ்ப்பாணம்)

ஆதரவற்ற முதியோர்களின் தொகை நாளுக்குநாள் அதிகரித்து செல்வதனால் முதியோர்களை பராமரிப்பதற்காக கடந்த 14 ஆண்டுகளாக தொல்புரம் சுழிபுரத்தில் முதியோர் இல்லம் இயங்கி வருகின்றது.

அங்கு தற்போது 78 முதியோர்களை உள்வாங்கி பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

மேலும் பலர் விண்ணப்பித்து வருவதால் கீரிமலையில் போரினால் அழிடைவந்த கிருஷ்ணபிள்ளை மடத்தின் நிலத்தில் 12 நவீன அறைகள் கொண்ட புதிய முதியோர் ஆச்சிரமக் கட்டடத்தொகுதி அமைக்கப்பட்டு வருகிறது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி முன்னாள் அதிபர் அமரர் கிருஷ்ணபிள்ளையின் குடும்பத்தினரிடம் 19 பரப்பு நிலத்தை இப்பாரிய பணிக்கு அன்பளிப்பாகப்பெற்று ரூபாய் 20 மில்லியன் செலவில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் மார்ச் மாதம் இவ் ஆச்சிரமம் திறந்துவைக்கப்படவுள்ளது என சிவபூமி அறக்கட்டளை தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்துள்ளார். (5-4)




# மோ.சைக்கிள், தொலைக்காட்சி திருட்டு

## இணுவிலில் சம்பவம்

(குப்பிழான்)

இணுவில் மேற்கு வன்னியசிங்கம் வீதியில் வீடொன்றின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பெறுமதியான மோட்டார் சைக்கிள் மற்றும் தொலைக்காட்சி என்பன நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை திருடிச் செல்லப்பட்டன.

குறித்த வீட்டுக்குச் சென்ற திருடர்கள் வீட்டிலிருந்தவர்கள் உறக்கத்திலிருந்த சமயம் வீட்டுக் கதவுப் பூட்டை உடைத்து சுமார் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிளைத் திருடியுள்ளனர்.

அத்துடன் வீட்டின் ஒரு பகுதியில் வைக்கப்பட்டிருந்த 40 ஆயிரம் ரூபா பெறுமதியான தொலைக்காட்சியையும் திருடிக் கொண்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

மேற்படி திருட்டுச் சம்பவம் தொடர்பில் வீட்டின் உரிமையாளரான பருத்தித்துறைப் பிரதேச செயலக உத்தியோகத்தர் அ. சபேசன் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்நிலையில் பொலிஸார் நேரடியாகச் சென்று சம்பவம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொண்டனர். (5-4-18)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கொரோனா தடுப்புச் செயற்பாடுகளில் ஒன்றாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் தடுப்பூசி வழங்கல் தொடர்பாக மக்கள் மத்தியில் நிலவுகின்ற தவறான கருத்துக்களைத் தெளிவுபடுத்தும் மக்கள் சந்திப்பு ஒன்று இன்று 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 7 மணியளவில் துன்னாலை அல்லையம்பதி வடிவேலர் மணிமண்டபத்தில் கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் செந்தூரன் தலைமையில் நடைபெறவுள்ளது என பகுதிக்கான பொதுச்சுகாதார பரிசோதகர் நந்தகுமார் அறிவித்துள்ளார்.(5)

# ஆன்மிக சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் இடம்பெற்றுவரும் வாராந்தச் சிறப்புச்சொற்பொழிவு எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆலய சண்முக விலாச மண்டபத்தில் மாலை 5.15 மணிக்கு "பிராண நன்னாயகம்" என்னும் பொருளில் சைவப்புலவர் ஏ.அனுசாந்தன் சொற்பொழிவாற்றுவார். (5-4)

# விசேட பூஜை வழிபாடு

(யாழ்ப்பாணம்)

உலகெங்கிலும் வாழும் மக்கள் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மீள்வதற்காக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இறை ஆசி வேண்டி வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில் நாளை மறுதினம் 18 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் தென்மராட்சி வரணிசிட்டிவேரம் கண்ணகை அம்மன் கோவிலில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

பூஜை வழிபாடுகளின் நிறைவில் ஆலய பிரதம குருக்கள் சக்திக்கிரியா குருமணி சிவஸ்ரீ இ.குமாரசுவாமிக்குருக்களின் அருளாசி உரையும் வேத பாராயணமும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இடம்பெறும் "ஆலய தரிசனம்" நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு ஒளிபரப்புச்செய்யப்படும்.(5-4-6)

# வீதிப் போக்குவரத்து தற்காலிகமாகத் தடைப்படும்

(குப்பிழான்)

ஊரெழு மேற்கு மின்சார நிலைய வீதியில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினரால் மேற்கொள்ளப்படும் நீர்வழங்கல் தொடர்பான திருத்த வேலைகள் காரணமாக சுமார் ஒரு கிலோ மீற்றர் நீளமான பகுதி வீதியில் தற்காலிகமாகப் போக்குவரத்துத் தடை செய்யப்பட்டுள்ளது.

இதனால், பொதுமக்கள் சில நாட்களுக்கு மாற்றுப் பாதையைப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (5-4-18)

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையம் திறந்து வைப்பு

(நல்லூர்)

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு தனியார் முகவர் நிலையத்தின் வடக்கு மாகாண கிளை நேற்றையதினம் யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த நிலையத்தினை வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர் பியங்கர ஜயரத்ன கலந்துகொண்டு திறந்து வைத்துள்ளார்.

திறப்பு விழாவில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளர் சு.அருமைநாயகம், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் கமல் ரத்வத்த, யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் க.மகேசன், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பிரதிநிதி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராம நாதனின் பிரதிநிதி உள்ளிட்ட விருந்தினர்கள்கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(5-4-33-101)



# விண்ணப்பம் கோரல்

(குப்பிழான்)

வலி.மேற்கு சங்கானை கலாசார மத்திய நிலையத்தில் 2021 ஆம் ஆண்டிற்கான இலவச வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன. இதில் கர்நாடக சங்கீதம், பரதநாட்டியம், சித்திரம், மிருதங்கம், ஆங்கிலம், சிங்களம், நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடநெறிகள் இலவசமாக கற்பிக்கப்படவுள்ளன.

பாடநெறிகளைக் கற்க விரும்பும் மாணவர்கள் எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னர் திங்கட்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் சங்கானை பட்டின சபை வீதியில் உள்ள கலாசார மத்திய நிலையத்தில் படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்க முடியும் எனவும் மேலதிக விபரங்களுக்கு 077 247 8017 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கலாசார மத்திய நிலையப் பொறுப்பதிகாரி பொ.சிவராஜசிவம் அறிவித்துள்ளார்.(5-4-6-18)



யாழ்ப்பாண மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவும் கியூமெடிக்கா (Humedica) நிறுவனமும் இணைந்து ஊடகவியலாளர்களுக்கு தனிநபர் பாதுகாப்பு அங்கிகள் வழங்கி வைக்கப்பட்டன. யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஊடகவியலாளர்களுக்கு இத்தனிநபர் பாதுகாப்பு அங்கிகள் வழங்கப்பட்டன.

(படம்:-ஐ.சிவசாந்தன்)



வலிகாமம் தெற்குப் பிரதேச சபை உறுப்பினர் பா.சுரேஸ்குமாரின் வட்டார நிதி ஒதுக்கீட்டில் புனரமைக்கப்பட்ட சுன்னாகம் தம்பிமுத்து உபாத்தியார் 2 ஆம் குறுக்கு வீதி நேற்று முன்தினம் பிரதேச சபை உறுப்பினர் பா.சுரேஸ்குமாரினால் மக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டது. (படம்:-ரவிசாந்)

# வடக்கு-கிழக்கில் பயங்கரவாதத்தை ஆதரிக்கும் அமைப்புக்கள் புலனாய்வுத்துறையை பலப்படுத்த வேண்டும் என்கிறார் கெஹலிய

(கொழும்பு)

**வடக்கு-கிழக்கில் பயங்கரவாதத்தை ஆதரிக்கும் அமைப்புக்கள் பல உருவாகியுள்ளன என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.**



கண்டியில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடக சந்திப்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது. “தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கும் நாடு என்ற ரீதியில் பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்குவதற்கு ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லை.

மேலும் வடக்கு மற்றும் கிழக்கில் பயங்கரவாதத்திற்கு ஆதரவு வழங்கும் அமைப்புக்கள் மீண்டும் உருவாகியுள்ளன.

இதேவேளை நல்லாட்சி அரசாங்க காலப்பகுதியில் நாட்டின் புலனாய்வுப் பிரிவு செயலிழந்து காணப்பட்டமையினால் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுக்க வேண்டியேற்பட்டது.

ஆகவேதான் தற்போது புலனாய்வுத்துறையை மேலும் வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றோம்.

அதாவது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையில் புலனாய்வுதுறையை பலப்படுத்துவோம்” என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)


## அழகியற்கலை பல்கலைக்கழகம்

### பதவி வெற்றிடங்கள்

இந்த பல்கலைக்கழகத்தின், கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிரந்தர பதவிகளுக்காக தெரிவு செய்யப்படுவதற்கு 2021.02.25ஆம் திகதி வரை விண்ணப்பம் கோரப்படுகின்றது.

### 1. தொழில்நுட்ப அலுவலர் (கட்புல செவிப்புல) தரம் III

**தகைமைகள்**

(1) க.பொ.த (உயர்தரம்) பரீட்சையில் எந்தவொரு துறையிலும் ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

*மற்றும்*

(2) (அ) பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டமூலத்தால் ஸ்தாபிக்கப்பட்ட மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழு அல்லது நிதியியல் நிறுவனமொன்றினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிடமிருந்து இலத்திரனியல் மற்றும் தொலைதொடர்பு/ இலத்திரனியல்/ பல்லூடகம் அல்லது கட்புல செவிப்புல தொழில்நுட்பத் துறையில் N.V.Q 5 போன்ற மட்டமொன்றிற்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

*அல்லது*

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் கட்புல செவிப்புல வேலை தொடர்பாக ஒரு வருட அனுபவத்துடன் மேற்படி (2) (அ) தகைமைகளுக்குச் சமமான மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இலத்திரனியல் மற்றும் தொலைதொடர்பு/ இலத்திரனியல்/ பல்லூடக அல்லது கட்புல செவிப்புல துறையில் தொழில்நுட்பத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**சேர்த்துக்கொள்ளப்படும் முறை:**
எழுத்துமூல மற்றும் / அல்லது செயன்முறைப் பரீட்சையொன்று மற்றும் நேர்முகத் தேர்வொன்றின் மூலம்

**சம்பள அளவுத்திட்டம்:**
ரூ. 31,625 - 7X300, 10x355 - 37,275/- (மாதமொன்றிற்கு) U-MT I (111A)
(ஆரம்பச் சம்பளம் ரூ. 31,625/ என்பதுடன் இதற்கு மேலதிகமாக அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் செலுத்தப்படும்.)

**வயது:** 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

### 2. முகாமைத்துவ உதவியாளர் (கணக்குப் பேனுநர்) தரம் III

**தகைமைகள்**

01 க.பொ.த (சா/த) பரீட்சையில்,
- i. சிங்கள மொழி/ தமிழ் மொழி
- ii. ஆங்கில மொழி/ ஆங்கில இலக்கியம்
- iii. கணிதம்

ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

*மற்றும்*

02 க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரே அமர்வில் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும் (பொது வினாப் பத்திரம் தவிர்ந்தது)

**கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.**

அ. கணனி பிரயோக உபயோகம் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 06 மாதத்திற்கும் குறையாத அங்கீகரிக்கப்பட்ட மட்டத்திலான தகைமை.

*மற்றும்*

ஆ. கணனி பிரயோக பொதிகை உபயோகம் தொடர்பாக 02 வருட அனுபவம்.

**பதவிக்கு உரித்தான விசேட தகைமைகள்:**

அ. திறன் அபிவிருத்தி மற்றும் தொழில்சார் பயிற்சி அமைச்சின் கீழான இலங்கை தொழில்நுட்பக் கல்லூரி/ தொழில்நுட்ப நிறுவனம் மூலம் நடாத்தப்படும், கணக்கியல் நிபுணர்களுக்கான தேசிய சான்றிதழைப் பெற்றிருத்தல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிடமிருந்து அதற்குச் சமமான தகைமையைப் பெற்றிருத்தல்

*அல்லது*

ஆ. க.பொ.த (உ/த) பரீட்சையில் வர்த்தகத் துறையில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**சேர்த்துக்கொள்ளப்படும் முறை:**
எழுத்துமூலப் பரீட்சை மற்றும் / நேர்முகப் பரீட்சையொன்றின் மூலமேயாகும்.

**சம்பள அளவுத்திட்டம்:**
ரூ. 30,725 - 17X300 - மாதமொன்றிற்கு 35,825/- U-MN I (111A)
(ஆரம்பச் சம்பளம் ரூ. 30,725/ என்பதுடன் இதற்கு மேலதிகமாக அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் செலுத்தப்படும்.)

**குறிப்பு** (அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்
(ஆ) 18 வயதிற்குக் குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்
(இ) சிறந்த குணாதிசயங்களைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்**

1. மேற்படி பதவி தொடர்பான விபரப்பத்திரம் மற்றும் விண்ணப்பத்தை ரூ. 15.00 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட 9"X4" அளவிலான கடித உறையொன்றை, 2021.02.22ஆம் திகதிக்கு முன்னதாக 'உதவி பதிவாளர்/ கல்வி சாரா நிறுவனப் பிரிவு, அழகியற்கலை பல்கலைக்கழகம், இலக்கம் 21, அல்பர்ட் கிறசன்ட், கொழும்பு 07' இற்கு அனுப்புவதன் மூலம் அல்லது பல்கலைக்கழக இணையத்தளத்திலிருந்து (www.vpa.ca.lk) பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
2. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் 2021.02.25 அன்று பி.ப. 4.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் 'உதவி பதிவாளர்/ கல்விசாரா நிறுவனப் பிரிவு, அழகியற்கலை பல்கலைக்கழகம், இலக்கம் 21, அல்பர்ட் கிறசன்ட், கொழும்பு 07'. என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பம் சேர்க்கப்படும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி குறிப்பிடப்படல் வேண்டும்.
3. உரித்தான அனைத்து சான்றிதழ் பத்திரங்களினதும் போட்டோ பிரதி மாத்திரம் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.
4. அரசாங்க சேவை அல்லது நியதிச் சேவைகளைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள், தமது விண்ணப்பங்களை குறித்த பிரிவுத் தலைவர்கள் ஊடாக அனுப்பி வைக்க வேண்டும்.
5. தேவைப்படும் தகைமைகளைக் கொண்டிராத, பூர்த்தி செய்யப்படாத, குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும், உரித்தான மாதிரிக்கமைவாக அனுப்பப்படாத மற்றும் அனுபவத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்,
அழகியற்கலை பல்கலைக்கழகம்,
21, அல்பர்ட் கிறசன்ட்
கொழும்பு 07.
2021.02.08


## மீண்டும் மிரட்டும் மலேரியா

(கொழும்பு)

இலங்கையில் ஒரு வாரத்திற்குள் மூன்று மலேரியா நோயாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை 2016 ஆம் ஆண்டு மலேரியா இல்லாத நாடாக அறிவிக்கப்பட்டது. ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளில் வெளிநாடுகளில் இருந்து வந்தவர்களால் மலேரியா நோயாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டனர்.

கண்டுபிடிக்கப்பட்ட மூன்று மலேரியா நோயாளிகளும் ஆபிரிக்க நாடுகளில் இருந்து வருகை தந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் இலங்கைக்கு வந்த வேளை தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட நிலையில் மலேரியா இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இவர்கள் மூவரும் பொரலஸ்கமுவ, பேருவல மற்றும் ஹொரண பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் கடந்த ஆண்டு சுமார் 30 மலேரியா நோயாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## நாட்டில் 27% பேருக்கு தடுப்பூசி செலுத்த ஒப்புதல்

(கொழும்பு)

நாட்டில் ஒட்டுமொத்த மக்கள் தொகையில் **27%** பேருக்கு கொரோனா வைரஸ் தடுப்பூசி வழங்குவது தொடர்பில் உலக சுகாதார அமைப்பு இலங்கையுடன் பேசியுள்ளது.

இலங்கை மக்கள் தொகையில் **20%** பேருக்கு தடுப்பூசி வழங்கப்படும் எனவும் உலக சுகாதார அமைப்பு முன்னர் உறுதியளித்திருந்தது.

இந்நிலையில் அதனை அதிகரித்து மொத்த மக்கள் தொகையில் **27%** பேருக்கான தடுப்பூசிகளை வழங்க உலக சுகாதார அமைப்பு பரிசீலித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## தனியார் பேருந்து உரிமையாளர்களின் பணிப்பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது

(கொழும்பு)

இன்று முன்னெடுக்கப்படவிருந்த தனியார் பேருந்து சேவையாளர்களின் பணிப்புறக்கணிப்பு கைவிடப்பட்டுள்ளது.

இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத் தலைவர் கெமுனு விஜேரத்ன இதனை தெரிவித்துள்ளார்.

தங்களது கோரிக்கைகளுக்கு **90%** தீர்வு வழங்க அதிகாரிகள் உறுதியளித்ததையடுத்தே இந்தப் பணிப்புறக்கணிப்பு கைவிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

## சிறைச்சாலை அதிகாரிகளுக்கும் இன்று முதல் தடுப்பூசி


(கொழும்பு)

நாட்டின் அனைத்து சிறைகளிலும் பணியாற்றும் சிறை அதிகாரிகளுக்கு இன்று முதல் கொவிட் -19 தடுப்பூசி செலுத்தப்படும் என்று சிறைச்சாலை திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி நாடு முழுவதும் 5,100 சிறைச்சாலை அதிகாரிகளுக்கு தடுப்பூசி செலுத்தப்படும் என்று சிறைச்சாலை செய்தித் தொடர்பாளர் சந்தன ஏகநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

சிறை அதிகாரிகள் பொது போக்குவரத்தைப் பயன்படுத்துவதால் தடுப்பூசி போட வேண்டும் என்றும், வைரஸால் பாதிக்கப்படும் அபாயத்தை அவர்கள் எதிர்கொள்ளக் கூடிய தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் என்றும் சுகாதார அமைச்சகம் பரிந்துரைத்துள்ளது. (நி-4)

# டெக் போல் அறிமுகமும் சம்மேளன அங்குரார்ப்பணமும்



(நெளுக்குளம்)

இலங்கை விளையாட்டு துறை அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள புதிய விளையாட்டான டெக்போல் விளையாட்டு வவுனியாவில் அறிமுகம் செய்யப்பட்டதோடு இவ் விளையாட்டுக்கான சம்மேளனமும் ஆரம்பிக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரேஸ்குமார், டெக்போல் சம்மேளனத்தின் வவுனியா இணைப்பாளர் அன்ரூ அன்ஸலி ஆகியோர் முன்னிலையில் இந்தச் சம்மேளனம் ஆரம்பிக்கப்பட்டது.

டெக்போல் விளையாட்டானது ஒலிம்பிக் போட்டிகளில் விளையாடப்பட்டு வருவதோடு உலகக் கிண்ணப் போட்டிகளாகவும் விளையாடப்பட்டு வருகிறது.

இதேவேளை 2022 ஆம் ஆண்டு முதல் இலங்கை தேசிய விளையாட்டு போட்டிகளுக்குள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-4-6-299)

# பலரது முயற்சிகளின் பின்னர் அம்புலன்ஸ் வண்டி மீண்டும் சேவையில்

(அக்கராயன்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச வைத்தியசாலைக்கு தற்போது அம்புலன்ஸ் வண்டி வழங்கப்பட்டுள்ளது. கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக இப்பிரதேச வைத்தியசாலையில் அம்புலன்ஸ் வண்டி இல்லாததன் காரணமாக நோயாளர்களை முல்லைத்தீவு பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதில் நெருக்கடிகள் காணப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மிக முக்கிய வைத்திய சாலையான ஒட்டுசுட்டான் பிரதேச வைத்தியசாலையினை நம்பி ஒட்டுசுட்டானில் பல கிராமங்களைச் சேர்ந்த மக்கள் வாழ்கின்ற நிலையில் ஒட்டுசுட்டான் பிரதேச வைத்திய சாலையில் அம்புலன்ஸ் வண்டி இல்லாததன் காரணமாக நோயாளர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வந்தனர்.

தமது சொந்த முயற்சியினால் ஒட்டுசுட்டானில் இருந்து முல்லைத்தீவு பொதுவைத்தியசாலைக்கு சென்று வந்த நிலையில் கடந்த ஒரு வார காலமாக ஒட்டுசுட்டான் பிரதேச வைத்தியசாலையில் அம்புலன்ஸ் வண்டி பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக ஒட்டுசுட்டான் பிரதேச வைத்தியசாலையில் இருந்து முல்லைத்தீவு பொது வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக நோயாளர்கள் செல்லக்கூடிய நிலைமை உருவாகியுள்ளது. (5-4-6-350)

# நட்டஈடு பெற்றுத் தருமாறு விவசாயிகள் கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள காலபோக நெற்செய்கை அண்மையில் பெய்த மழை வெள்ளம் காரணமாக கணிசமான அளவு வயல் நிலங்கள் முழுமையாக அழிவடைந்துள்ளன.

இதற்கான இழப்பீடுகளை பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பம் செய்துள்ள நிலையில் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் தற்போது அதற்கான மதிப்பீடுகளை செய்யும் அதிகாரிகள் ஒரு சில இடங்களை மாத்திரம் பார்வையிடுவதாக விவசாயிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

அண்மையில் பெய்த மழை காரணமாக தமக்கு ஏற்பட்ட அழிவுகளுக்கு நட்ட ஈடுகளை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-4-6-315)

# வவுனியாவில் உரிமை கோரப்படாத சுவரொட்டிகள்

(குருமன்காடு)

வவுனியா நகரின் பல பகுதிகளில் ஏழை விவசாயிகளின் வயிற்றில் அடிக்காதே, பறிக்காதே பறிக்காதே மன்னார் கோயில்மோட்டைக் காணியைப் பறிக்காதே போன்ற பல வாசகங்களை தாங்கிய சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.



பறிக்காதே பறிக்காதே மன்னார் கோயில் மோட்டைக் காணியைப் பறிக்காதே, மன்னார் விவசாயியின் கூட்டத்தில் விவசாயிகள் காணி வேண்டாம் என்று பொய் சொன்னதாக பொய் சொல்ல வேண்டாம். மன்னார் அரசாங்க அதிகாரிகளே மன்னார் காணியில் 35 வருடகாலமாக விவசாயம் செய்த கோயில் மோட்டை விவசாயிகளுக்கு காணிகளை வழங்குங்கள் போன்ற பல வாசகங்களை தாங்கிய சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

எனினும் குறித்த சுவரொட்டிகள் உரிமை கோரப்படாத நிலையில் காணப்பட்டன.

வவுனியா நகர், மன்னார் வீதி, நெளுக்குளம், புகையிரத நிலைய வீதி போன்றவற்றில் குறித்த சுவரொட்டிகள் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன. (5-4-6-250)



கிளிநொச்சி ஊடக மையம் நேற்று முன்தினம் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரனால் திறந்து வைக்கப்பட்டது. சர்வமதத் தலைவர்களின் ஆசியுடன் திறந்து வைக்கப்பட்ட குறித்த நிகழ்வுடன் இணையத்தளம் ஒன்றும் திறந்து வைக்கப்பட்டது. (படம்- சப்தசங்கரி)

# கால்நடைகளால் நெற்பயிர்கள் நாசம் விவசாயிகள் கவலை

(வரணி)

மீசாலை கமநலசேவை நிலையப் பிரிவிற்குட்பட்ட மாசேரி வரணி கிராமத்தில் நெற் பயிர்களை கால்நடைகள் அழிப்பதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் தெரிவிக்கையில், தற்போது பெரும்போக நெல் அறுவடை இடம்பெற்று வருவதாகவும் கால்நடைகளை சிலர் அவிழ்த்து விடுவதுடன் வயல் நிலங்களில் அவற்றினை கட்டிவருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதனால் நெற் பயிர்களை கால்நடைகள் மேய்கின்றன. இவ் விடயம் தொடர்பாக மாசேரி கமக்கார அமைப்பினருக்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

நெற் பயிர்செய்கை ஆரம்பித்து அறுவடை செய்து முடியும் வரை கால்நடைகளை அவிழ்த்து விடுதல், வயல் நிலங்களில் கட்டுதல் போன்ற நடவடிக்கைகள் தண்டனைக்குரிய குற்றமாகக் காணப்படுகின்ற போதும், மாசேரி கமக்கார பிரிவிற்குட்பட்ட பகுதியில் இவ்விடயம் தொடர்ச்சியாகவே இடம் பெற்று வருகின்றது.

மேலும் வரட்சி, மழை வெள்ளம் போன்றவற்றினால் அழிவடைந்தது போக மீதமிருக்கின்ற நெற்பயிர்களையாவது அறுவடை செய்ய முற்படும் போது கால்நடைகள் அவற்றினை அழிப்பதால் பெரிதும் பாதிக்கப்படுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே இனிவரும் காலங்களிலாவது இவ்வாறான நடவடிக்கைகள் இடம்பெறுவதை கட்டுப்படுத்த அதிகாரிகள் நடவடிக்கையெடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-4-103)

# பேருந்து சேவை இன்மையால் கிராம மக்கள் பாதிப்பு

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தீர்மானம் புறக்கணிக்கப்பட்டு அம்பகாமத்திற்கான பேருந்து நடத்தப்படவில்லை என புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் மு.முகுந்தகஜன் தெரிவித்துள்ளார்.

கடந்த இரு ஆண்டுகளுக்கு முன்னர் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முல்லைத்தீவு அம்பகாமம் கிராமத்திற்கு இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து சேவை நடத்தப்பட வேண்டும் என தீர்மானம் எடுக்கப்பட்டது.

அம்பகாமம் கிராமத்தில் இருந்து மாங்குளம் ஆதார வைத்தியசாலைக்கு பொது மக்கள் செல்ல வேண்டும்.

அத்துடன் மாங்குளம் மகா வித்தியாலயத்திற்கு அம்பகாமம் கிராமம் உட்பட பல கிராமங்களின் மாணவர்கள் பேருந்து சேவையினை நடத்துவதன் மூலம் வருகை தர முடியும் என கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட நிலையில் அம்பகாமம் கிராமத்திற்கு உடனடியாக இலங்கை போக்குவரத்து சபையினர் மாணவர்களின் போக்குவரத்து நேரத்தில் பேருந்து சேவை இடம்பெற வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஆனால் இந்த உத்தரவு இரு ஆண்டுகள் கடந்தும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

மாங்குளம் நகரத்தில் இருந்து பத்து கிலோமீற்றர் தூரத்தில் அம்பகாமம் உள்ளது. பேருந்து சேவை இடம்பெறாமையினால் தொடர்ச்சியாக இக்கிராம மக்கள் போக்குவரத்து நெருக்கடியினை எதிர் கொண்டுள்ளனர் எனவும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் பல கிராமங்கள் போக்குவரத்து நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார். (5-4-6-350)

# இராசிபலன்

16.02.2021
மாசி 04, செவ்வாய்க்கிழமை
பஞ்சமி பின்னிரவு 6.16 மணிவரை
ரேவதி முன்னிரவு 9.38 மணிவரை
சுபநேரம் 11.03-12.33 மணிவரை
இராகுகாலம் 3.33-5.03 மணிவரை
சந்திராஷ்டமம் பூரம், உத்தரம்

வளவன்

**மேஷம்:** தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், தேவையற்ற சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது. சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**ரிஷபம்:** தொலை தூரத்திலிருந்து சுப தகவல்கள் வந்து சேரலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** மன நிறைவு கூடும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அனுகூலம் தரும், செய்தொழிலில் சிறப்புக்கள் கூடும் நாள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**கடகம்:** பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம்.

**சிம்மம்:** செய்தொழிலில் சில குழப்பங்கள் தோன்றி மறையும், எடுத்த காரியங்களை நிறைவேற்ற சில தடை தாமதங்கள் ஏற்படலாம், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.

**கன்னி:** கேளிக்கை கொண்டாட்டங்களில் நம்பிக்கை கூடும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**துலாம்:** நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சுவாரஸ்யமான சம்பங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** விருத்தினர்களின் வருகையுண்டு, தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**தனுசு:** எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், நண்பர்கள் நம்பிக்கைக் குரியவர்களாக நடந்து கொள்வர், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்:** உள்ளம் மகிழும் சம்பவங்கள் நடைபெறலாம், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், போசன சுகமுண்டு, காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கும்பம்:** குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், செல்வ நிலை உயரும் நாள், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும்.

**மீனம்:** வழிபாடு ஆனந்தம் தரும், மற்றவர்கள் வாங்கிய பொருட்களை பார்த்து நீங்கள் வாங்க விருப்பப்படுவீர்கள், ஆழ்ந்த சிந்தனையுண்டு, போசன சுகமுண்டு.

உன்னுடைய எண்ணம் போலவே உன் வாழ்க்கை அமையும்.

# சூரிய மின் உற்பத்தி நிலையங்கள்

## சர்வதேச விலைமனுக்கோரல் நடைமுறைக்கேற்ப ஒப்பந்தம் சீன நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது

**(கொழும்பு) யாழ்.குடாநாட்டுக்கு அருகிலுள்ள மூன்று தீவுகளில் சூரிய மின் உற்பத்தி நிலையங்களை அமைப்பது தொடர்பில் சர்வதேச விலை மனுக்கோரல் நடைமுறைகளுக்கு அமையவே இந்த ஒப்பந்தம் சீன நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளதாக சீனத் தூதரகத்தின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.**

இது முற்றிலும் வர்த்தக ரீதியான ஒப்பந்தம். சீனாவின் தனியார் நிறுவனத்திற்கே இந்த ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது எனவும் அந்த ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

குறித்த மூன்று தீவுகளில் சூரிய மின் உற்பத்தி நிலையங்களை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்தை சீன நிறுவனத்திற்கு வழங்கியமை தொடர்பாக இந்தியா எதிர்ப்பு தெரிவித்த நிலையிலேயே இலங்கையில் உள்ள சீன தூதரகம் மேற்கண்டவாறு பதிலளித்துள்ளது.

எந்த நாடாக இருந்தாலும் நிறுவனம் ஒன்றின் சட்ட ரீதியான உரிமைகளை பாதுகாப்பது முக்கியமானது என சீன தூதரக பேச்சாளர் தெரிவித்துள்ளார். (நி-4)

# முதலாம் வகுப்பில் இணையச்சென்ற சிறுவனுக்கு எமனாகிய பார ஊர்தி

(பதுளை)

முதலாம் வகுப்பில் இணைவதற்கு நேற்றுக் காலை தாயுடன் பாடசாலைக்குச் சென்ற மாணவர் ஒருவர் பார ஊர்தி மோதி உயிரிழந்த சம்பவம் பதுளையில் பதிவாகியுள்ளது.

பதுளை - அசேலபுரவில் வசித்து வந்த வருண் பரதீஷ் என்ற மாணவனே விபத்துக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தில் காயமடைந்த தாய் பதுளை பொது வைத்தியசாலையில அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் பாரவூர்தியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் இது குறித்த மேலதிக விசாரணைகள் பதுளை பொலிஸாரால் மேற்கொள்ளப்படுகின்றன. (நி-4)

# நிறுத்தப்பட்டிருந்த கார் திடீரென தீ பிடித்து எரிந்தது



(கொழும்பு)

கொழும்பில் அமைந்துள்ள சுகாதார அமைச்சகத்திற்கு முன்பாக நிறுத்தப்பட்டிருந்த காரொன்று திடீரென தீப் பிடித்து எரிந்துள்ளது.

இந்த தீவிபத்தானது நேற்று காலை 9.15 மணியளவில் ஏற்பட்டுள்ளது.

தீயணைப்பு படையினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தபோதும், அக் கார் முற்றாக தீக்கிரையானது.

தீ விபத்துக்கான காரணம் இன்னும் வெளியிடப்படவில்லை. (நி-4)

# பா.உறுப்பினர்களுக்கு இன்று தடுப்பூசி

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இன்று கொவிட் தடுப்பூசி வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதனடிப்படையில் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கொழும்பு இராணுவ வைத்திய சாலையில் வைகத்து அஸ்ரா ஜெனெகா தடுப்பூசி வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி-4)

# தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்தில் மேலும் 10 பேருக்கு கொரோனா தொற்று

(கொழும்பு)

தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்தில் மேலும் 10 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த தொற்றாளர்கள் சேவையாற்றிய 6 வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. (நி-4)

# துப்பாக்கி தயாரித்தவர் சிக்கினார்

(மொனராகலை)

மொனராகலை பகுதியில் ஒரே நேரத்தில் இரண்டு தோட்டாக்களை வெளியேற்றக் கூடிய வகையில் துப்பாக்கியொன்றை தயாரித்து வைத்திருந்தமை தொடர்பில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது, மொனராகலை பகுதியில் நேற்று முன்தினம் பாணந்துறை மத்திய ஊழல் தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது உள்நாட்டு துப்பாக்கியுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ரி - 56 ரக துப்பாக்கி தோட்டாக்களை பயன்படுத்தக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த துப்பாக்கியில், ஒரே நேரத்தில் இரு தோட்டாக்களை வெளியேற்றக் கூடிய வசதியும் காணப்படுகின்றதெனவும், வெல்லவாய பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளாரெனவும் தெரிய வந்துள்ளது.

சந்தேக நபரான இளைஞர் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (நி-4)



# சிறுவர் அரங்கம்

## தேளும் தவளையும்



அது ஒரு அழகிய காடு. அந்த காட்டில் கெட்ட சுபாவமுள்ள தேள் ஒன்று வசித்து வந்தது. அந்தக் காட்டின் நடுவில் ஒரு நீரோடை இருந்தது. அந்தத்தேளுக்கு இக்கரையில் இருந்து அக்கரைக்கு போக வேண்டியிருந்தது.

அக்கரைக்குப் போவதற்காக அந்த நீரோடையில் இருக்கும் பெரிய மீன்கள், நண்டு, ஆமை போன்றவைகளிடம் தேள் உதவிகேட்டது. ஆனால் அந்த பொல்லாத தேள் தம்மை கொட்டிவிடும் என்று அவை மறுத்து விட்டன.

எப்படி நீரோடையைக் கடப்பது என்று தேள் யோசித்துக் கொண்டு இருந்த போது அந்த நீரோடையில் தவளை ஒன்று வந்து கொண்டிருந்தது.

தவளையைக் கண்ட தேள், "தவளையாரே! நான் அக்கரைக்குச் செல்ல வேண்டும் என்னை அங்கு கொண்டு போய் விட்டு விடுவீரா?" என்று கேட்டது.

"நானும் அக்கரைக்குத் தான் போகிறேன், என் முதுகில் ஏறிக்கொள்ளும் உம்மை நான் அக்கரையில் விட்டுவிடுகிறேன்!", என்றது தவளை.

தேளும் தவளையின் முதுகில் ஏறிக்கொண்டது. தவளை நீரில் நீந்திச்செல்ல ஆரம்பித்தது. சிறிது தூரம் தான் தவளை சென்றிருக்கும் தேளுக்கு ஒரு யோசனை வந்தது, நான் பல பேரைக் கொட்டியிருக்கிறேன். அவர்கள் வலியால் துடித்ததையும் பார்த்திருக்கின்றேன்.

ஆனால் நான் ஒருநாளும், தவளையை கொட்டவில்லை, இந்த தவளையைக் கொட்டினால் எப்படித் துடிக்கும்? இதை விட்டால் வேறு சந்தர்ப்பம் கிடைக்காது என்று தவளையைக் கொட்டிப் பார்க்க நினைத்தது. தேள் தவளையின் முதுகில் கொட்டியது. ஆனால்தவளை பேசாமல் போய்க் கொண்டிருந்தது.

தேள் தவளையைப் பார்த்து, "தவளையாரே! உமது உடம்பில் வலியே வருவதில்லையா?" என்று கேட்டது. தேளின் கெட்ட எண்ணத்தைப் புரிந்துகொள்ளாத தவளை, "எனது முதுகு வழவழப்பானது. அதனால் எனக்கு அந்த இடத்தில் வலியே வருவதில்லை" என்று சொன்னது தவளை.

ஆனால் எனது கழுத்துப்பக்கம் மென்மையாக இருக்கும். இதில் தான் எனக்கு வலிகள் காயங்கள் ஏற்படும் என்று சொன்னது தவளை. ஓகோ அப்படியா? என்று கேட்ட தேள், மெதுவாக தவளையின் கழுத்துப் பகுதியை நோக்கிச் சென்றது. கழுத்தில் இருந்து தலைப்பகுதிக்குச் சென்ற தேள் தவளையை கொட்ட ஆரம்பித்தது.

தேள் கொட்டவருவதை அறிந்து தவளை தலையை தண்ணீருக்குள் இழுத்துக் கொண்டது. தேள் நீரோடையில் விழுந்து விட்டது. தனக்கு உதவி செய்த தவளைக்கு கேடுவிளைவிக்க நினைத்த தேள் தண்ணீரில் மூழ்கி இறந்தது. தவளை கரையை நோக்கி நீந்திச் சென்றது.

**நீதி:ஒருவர் எவ்வித பலனையும் எதிர்பாராமல் எமக்கு உதவி செய்தாராயின், அவரின் உதவியை நாம், எம் வாழ் நாளில் என்றுமே மறந்து விடலாகாது. அவருக்கு நன்றியுடையவனாக இருத்தல்வேண்டும். மாறாக அவருக்கு கேடு செய்ய நினைப்போமாயின், அது எம்மையே வந்து சேரும்.**

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## சிரஞ்சீவி அலெக்சாண்டர்

118



உடனடியாக உங்களுக்குத் தேவை ஓய்வு மட்டுமல்ல. குடும்பத்தையும் சந்திக்க வேண்டும். அன்பைப் பரிமாறிக்கொள்ள வேண்டும்.

குடும்பத்தினரது தவிப்பையும் தணிக்க வேண்டும். புரிகிறது. இதோ இந்த நிமிடமே புறப்படலாம் மாசிடோனியாவுக்கு.

அறிவிப்பு வெளியான அடுத்த நொடியே வீரர்களின் முகத்தில் புன்னகை வழிந்தோடின. ஆர்ப்பரித்தனர். கருணையின் கடவுள் அலெக்சாண்டர் வாழ்க.

ஊர் திரும்பும் மகிழ்ச்சியில் வழியில் தென்படும் சிறுசிறு நாடுகளைத் தாக்கி அவற்றை தனது ஆளுகைக்குள் அடக்கியபடியே சென்றார் அலெக்சாண்டர்.

வழியில் மாலி என்றொரு நாடு இருந்தது. அந்நாட்டின் வில் அம்பு வீரர்கள் அசகாய சூரர்கள். பல நூறு அம்புகள் ஒருசேர தேனீக்கூட்டம் போல வந்து இடைவிடாது தாக்கும்.

அலெக்சாண்டரின் வீரர்களால் சுதாகரிக்க முடியவில்லை. அம்புப் பெருமழை தொடங்கியது. எதிர்பாராத நேரத்தில் அலெக்சாண்டர் அதில் சிக்கிக் கொண்டார். முதலில் மார்பில், அடுத்தது பின்னங்கழுத்தில், அப்புறம் இடுப்பில்.

மூன்று அம்புகள். மூர்ச்சையாகிக் கீழே விழுந்தார் அலெக்சாண்டர். அவர் உடலிலிருந்து இரத்தம் மட்டும் அசைந்து அசைந்து வழிந்து கொண்டிருந்தது வேறு. அசைவுகள் இல்லை.

அலெக்சாண்டரைப் பார்த்துக் கொண்டிருந்த வீரர்களின் கண்களில் கண்ணீர். மாமன்னர் இறந்து விட்டாரோ? கேள்விக் குறி அவர்களின் கண்களில் மிதந்தது. நாலாபுறமிருந்தும் மாலி வீரர்கள் வெறியோடு ஓடி வந்தார்கள்.

(தொடரும்)

# முகக்கவசம் அணிவதால் சுவாச மண்டல செயற்பாடு மேம்படுகிறது என்கிறது ஆய்வு அறிக்கை

(வோஷிங்டன்)

முகக் கவசம் அணிவது சுவாச மண்டலத்தின் செயற்பாட்டை மேம்படுத்துகிறது என அமெரிக்காவில் இருந்து வெளியாகும் மருத்துவ ஆராய்ச்சி இதழில் வெளியிடப்பட்டுள்ள ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முகக் கவசம் அணிவதால் கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்த முடியும். அதேநேரத்தில் முகக் கவசம் அணியும்போது நாம் சுவாசிக்கும் காற்றில் ஈரப்பதம் அதிகரிக்கிறது. அது ஆவி பிடிப்பதுபோல் செயற்பட்டு, சுவாச மண்டலத்தின் செயற்பாட்டை மேம்படுத்துகிறது. இதனால், நோய் எதிர்ப்பு சக்தியும் ஊக்குவிக்கப்படுகிறது என ஆய்வின் முதன்மை ஆசிரியர் அட்ரியன் பாக்ஸ் தெரிவித்துள்ளார்.

காய்ச்சலின் தீவிரத்தைத் தணிக்க உடலில் ஈரப்பதத்தை அதிகரிக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறது. இதேபோன்றதொரு முறையின் மூலம் கொரோனா பரவலின் தீவிரத்தையும் குறைக்க முடியும். முகக்கவசம் அணிவதன் மூலம் நுரையீரலில் ஈரப்பதம் அதிகரிக்கப்படுகிறது. இது வைரஸ்க்கு எதிராக போராடும் செயற்திறனை அதிகரிக்கிறது எனவும் ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

என் 95 முகக்கவசம், அறுவை சிகிச்சை முகக்கவசம், பருத்தி-பொலிஸ்டர் முகக்கவசம் மற்றும் கனமான பருத்தி முகக்கவசம் என்பவற்றைப் பயன்படுத்தி இந்த ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறான முகக்கவசங்களை அணிந்துகொண்டு தன்னார்வலர்கள் சுவாசித்தபோது உருவான ஈரப்பதத்தின் அளவை ஆய்வாளர்கள் அளவிட்டனர்.

முகக் கவசங்களை அணிந்திருந்தவர்களின் சுவாசப் பாதை அதிக ஈரப்பதத்துடன் காணப்பட்டது. இது நுரையீரலில் ஈரப்பதத்தை அதிகரித்து சுவாச மண்டலத்தின் செயற்பாட்டை மேம்படுத்துகிறது. இந்த மேம்பாடு தொற்று நோயை எதிர்த்துப் போராடவும் உதவுகிறது எனவும் ஆய்வாளர்கள் தெரிவித்தனர். (நி-4)

# கொரோனா பரவலின் ஆரம்பம் குறித்த தகவலை சீனா வெளியிட வேண்டும்

## பிரித்தானியா வலியுறுத்து

(லண்டன்)

கொரோனாத் தொற்று பரவலின் ஆரம்ப இடம் குறித்த தகவலை சீனா வெளியிட வேண்டும் என பிரித்தானியா வலியுறுத்தியுள்ளது.

முன்னதாக அமெரிக்காவும் இந்தக் கோரிக்கையை விடுத்திருந்த நிலையில் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் டொமினிக் ராப், இந்த விடயத்தில் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

குறிப்பாக உலக சுகாதார ஸ்தாபனத்தின் நிபுணர்கள் குழு, சீனாவின் வுஹான் நகருக்குச் சென்று தொற்று தொடர்பாக ஆராயும் போது அந்தக் குழுவுக்குச் சீனாவில் எந்த அளவு சுதந்திரம் வழங்கப்பட்டது என்பது குறித்து அவர் கவலை வெளியிட்டார்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் நிபுணர்கள் குழுவுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்பட்டதா? என்றும் அவர்களின் கேள்விக்கு விடை கிடைத்ததா? என்றும் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் டொமினிக் ராப் கேள்வி எழுப்பினார்.

சீனாவில் கொரோனாத் தொற்று உறுதியானவர்கள் பற்றிய மூலத் தகவல்களுக்குப் பதிலாக, பாதிக்கப்பட்ட நோயாளிகளின் தகவல் தொகுப்பே தங்களுக்கு வழங்கப்பட்டதாக உலக சுகாதார ஸ்தாபனத்தின் நிபுணர்கள் குழுவின் உறுப்பினர்கள் சிலர் முன்னர் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# லொறி கவிழ்ந்து விபத்திற்குள்ளானதில் 16 பேர் பலி, 5 பேர் காயம்

(டில்லி)

மகாராஷ்டிர மாநிலம் ஜல் கான் மாவட்டத்தில் பப்பாளி பழங்களை ஏற்றிச் சென்ற லொறியொன்று வீதியோர பள்ளத்தாக்கில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 16 பேர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த லொறி கிங்காவோன் கிராமத்தில் உள்ள கோவிலுக்கு அருகே விபத்துக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது லொறியில் பயணித்த 16 பேர் உயிரிழந்துள்ளதுடன், 5 பேர் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (நி-4)

# ஆர்ஜென்டினாவின் முன்னாள் ஜனாதிபதி கார்லோஸ் மெனெம் காலமானார்

(பியூனஸ் அயர்ஸ்)

ஆர்ஜென்டினாவின் முன்னாள் ஜனாதிபதி கார்லோஸ் மெனெம், நீண்ட காலமாக உடல் நலக் குறைவினால் பாதிக்கப்பட்டு, தலைநகர் பியூனஸ் அயர்ஸில் அமைந்துள்ள லாஸ் ஆர்கோஸ் மருத்துவமனையில் காலமானார் என்று அந் நாட்டு செய்தித்தாளான "லா நேசியன்" ஞாயிற்றுக்கிழமை செய்தி வெளியிட்டுள்ளது.

அவர் 1989 முதல் 1999 வரை ஆர்ஜென்டினாவின் ஜனாதிபதியாக இருந்தார்.

கவர்ச்சியான வாழ்க்கை முறையை வழிநடத்திய அரசியல்வாதியாக மெனெம் நினைவுகூரப்படுகிறார். (நி-4)

# கவச வாகன ரோந்துகள் மத்தியில் மியன்மாரில் மக்கள் ஆர்ப்பாட்டம்

(மியன்மார்)

மியன்மாரின் கவச வாகனங்கள் சகிதம் பல நகர வீதிகளில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ள நிலையில் நேற்றும் ஆங்காங்கு மக்கள் கூடி இராணுவ ஆட்சிக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபட்டனர்.

இராணுவத்தால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆங் சான் சூகி உள்ளிட்ட தலைவர்களை விடுவிக்க வலியுறுத்தி போராட்டங்காரர்கள் கோசமிட்டு வருகின்றனர்.

இதேவேளை, குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆங் சான் சூகி நேற்று திங்கட்கிழமை நீதிமன்றில் முன்னிறுத்தப்படுவார் என எதிர்பார்க்கப்பட்டது.



எனினும் நாளை அவர் நீதிமன்றில் நிறுத்தப்படவுள்ளதாக அவரது சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த பெப்ரவரி முதலாம் திகதி ஆங்சான் சூகி உள்ளிட்ட தலைவர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அன்று முதல் அங்கு இராணுவ ஆட்சி அமுலுக்கு வந்துள்ளது.

கடந்த நவம்பரில் இடம்பெற்ற தேர்தலில் ஆங் சான் சூகி தலைமையிலான தேசிய ஜனநாயக லீக் அமோக வெற்றி பெற்றது. எனினும் தேர்தலில் மோசடி இடம்பெற்றதாக ஆதாரமற்ற குற்றச்சாட்டை முன்வைத்து இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# குணமடைந்தோர் எண்ணிக்கையில் இந்தியா முதலிடத்தில் உள்ளது

(டில்லி)

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்தோர் எண்ணிக்கையில் உலகிலேயே இந்தியாதான் முதல் இடத்தில் இருக்கிறது.

இதுவரையில் உலகமெங்கும் கொரோனாவில் இருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை 6 கோடியே 8 இலட்சத்து 80 ஆயிரத்து 296 ஆகும். இந்தியா, ஒரு கோடியே 6 இலட்சத்து 11 ஆயிரத்து 731 பேரை கொரோனாவில் இருந்து மீட்டு முதல் இடத்தில் இருக்கிறது. (நி-4)



# கடற் கொள்ளையர்களால் கடத்தப்பட்ட மாலுமிகள் தாயகம் திரும்பினர்

(நைஜர்)

கினியா வளைகுடாவில் கடந்த மாதம் கடற் கொள்ளையர்களால் கடத்தப்பட்ட பதினைந்து துருக்கிய மாலுமிகள் துருக்கிக்குத் திரும்பியுள்ளனர்.

நைஜீரியாவில் இருந்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நாடு திரும்பியவர்களை துருக்கிய வெளியுறவு அமைச்சர் உள்ளிட்ட அதிகாரிகள் வரவேற்றுள்ளனர்.

குறித்த மாலுமிகள், கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் நைஜீரியாவில் விடுக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது தாயகம் திரும்பியுள்ளனர்.

இந்நிலையில், தாங்கள் கடத்தப்பட்டிருந்த மூன்று வாரங்களில் மரண அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டதாகவும் எனினும் உடல் ரீதியாக தாக்குதல்கள் மேற்கொள்ளப்படவில்லை எனவும் பாதிக்கப்பட்ட மாலுமிகள் தெரிவித்துள்ளனர். (நி-4)

# மீண்டும் இலங்கைக்கு வந்த தற்கொலை குண்டுதாரி

## தேடுதல் வேட்டை ஆரம்பம்



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடையவர் எனக் கருதப்படும் சாரா என அழைக்கப்படும் புலஸ்தினி ராஜேந்திரன் இந்தியாவிலிருந்து மீண்டும் இலங்கை வந்துள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

இது குறித்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் ஆணைக்குழு சி.ஐ.டியினருக்கு உத்தரவிட்டுள்ளது.

கட்டுவாப்பிட்டிய தேவாலயத்தில் தற்கொலை குண்டு தாக்குதலை மேற்கொண்டவரின் மனைவியான சாரா என அழைக்கப்படும் புலஸ்தினி இராஜேந்திரன் இந்தியாவிற்கு தப்பியோடியிருந்த நிலையில் மீண்டும் கடல் மார்க்கமாக இலங்கை திரும்பியுள்ளார் என்பது குறித்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஆணைக்குழு சி.ஐ.டியினருக்கு உத்தரவிட்டுள்ளது.

கடல் வழியாக இலங்கைக்கு வந்து சேர்ந்துள்ள புலஸ்தினி மன்னாரில் மூன்று இடங்களில் தங்கியிருந்த பின்னர் புத்தளத்திற்கு சென்று பின்னர் மட்டக்களப்பிற்குச் சென்றுள்ளார் என புலனாய்வு வட்டாரங்கள் தெரிவித்துள்ள நிலையிலேயே ஆணைக்குழு இது குறித்து விசாரணைகளை முன்னெடுக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் இன்னமும் கைது செய்யப்படாமல் தப்பியுள்ளவர்கள், பிணையில் விடுதலையானவர்கள் மற்றும் கைது செய்யப்பட்டு போதிய ஆதாரமின்மையால் விடுதலை செய்யப்பட்டவர்களை புலஸ்தினி சந்தித்துள்ளார் என ஆணைக்குழுவிற்கு தகவல் கிடைத்துள்ளதாக தெரிய வருகின்றது. (நி-4)

# கொரோனா தொற்றாளர்கள்

## உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் எண்ணிக்கையில் உண்மைத் தன்மையில்லை

### குறைத்து வெளியிடுவதால் நோயின் தீவிரத்தை மக்கள் உணரவில்லை

(கொழும்பு)

**இலங்கையில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் கொரோனா வைரஸ் தொற்று நோயாளர் தொகையை விட உண்மையில் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதாக இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கம் தெரிவித்துள்ளது.**

இவ்வாறு தொற்று நோயாளர் தொகையைக் குறைத்து மதிப்பிடுவது தொற்று நோயின் தீவிரத்தை மக்கள் உணர்ந்து கொள்ளாமல் இருக்க ஏதுவாக அமைந்து விடும் எனவும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தினர் எச்சரித்துள்ளனர்.

உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் தொற்று நோயாளர் தொகைக்கும் உண்மையில் நாம் களத்தில் பார்க்கும் நிலைமைக்கும் இடையில் முரண்பாடுகள் உள்ளன என பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கத்தின் தலைவர் எம்.ஜி.உபுல் ரோஹன தெரிவித்துள்ளார்.

தொற்று நோயாளர் தொகையை வெளிப்படுத்துவதில் முரண்பாடுகள் இருப்பதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கடந்த வாரம் கருத்து வெளியிட்டிருந்தது.

தொற்று நோயாளர் தொகை அதிகரித்து வரும் நிலையில் மருத்துவமனைகளின் பராமரிப்புத் திறன்கள் பாதிக்கப்படுகின்றன. சுகாதாரத் துறையினர் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர் எனவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## 455 பேர் நாட்டை வந்தடைந்தனர்

(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்து மேலும் 455 பயணிகள் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

நேற்று திங்கட்கிழமை காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேரப் பகுதியில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கிய 10 விமானங்களின் மூலமாக இவர்கள் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

இவ்வாறு நாட்டை வந்தடைந்த அனைவரும் இராணுவத்தினரால் தனிமைப்படுத்தல் நடவடிக்கைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர். (நி-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2232

### நதிஷா




### யுதேஷ்




### ஹர்சி




### தாருக்சன்




### கவிஸ்ணயி





### நிதுஷிகன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மீண்டும் பாராளுமன்றம் வருகிறார் ரணில் விக்கிரமசிங்க



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்புரிமைக்காக, கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்க அடுத்த மாதத்தின் முதல் வாரத்தில் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தவுள்ள தாக கட்சியின் உள்ளகத் தக வல்கள் தெரிவிக்கின்றன.

தேசியப் பட்டியல் பாரா ளுமன்ற உறுப்புரிமைக்காக அவரை பெயரிட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

எனினும், ரணில் விக்கிர மசிங்கவின் தீர்மானம் கிடை க்கும் வரையில் அந்த நட வடிக்கை தாமதமடைவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் இந்த மாத இறுதிக்குள் குறித்த தீர்மானம் கட்சிக்கு அறியப்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஒகஸ்ட் மாதம் இடம் பெற்ற பொதுத்தேர்தலில் பொது மக்கள் வாக்களிப்பின் மூலம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எந்த ஒரு ஆசனமும் கிடைக்கப்பெற வில்லை.

எனினும், கிடைக்கப்பெற்ற வாக்குகளின் அடிப்படையில் ஒரே ஒரு தேசியப்பட்டியல் பாரா ளுமன்ற உறுப்புரிமை மாத் திரம் ஐக்கிய தேசிய கட்சிக்கு கிடைத்தது.

அந்த தேசியப்பட்டியல் பாரா ளுமன்ற உறுப்புரிமைக்காக, பலரின் பெயர்கள் முன்னதாக முன்மொழியப்பட்ட நிலையில் அது தொடர்பில் தீர்மானம் மேற்கொள்வதற்காக கட்சியின் செயற்குழு பல தடவைகள் கூடி யது. எனினும் அந்த சந்தர் ப்பங்களில் தேசியப் பட்டியல் தொடர்பில் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள முடியாமல் போனதுடன், கட்சியை மறுசீரமைப்பு செய்வது குறித்து அதிக அவதானம் செலுத்தப் பட்டது.

இவ்வாறான பின்ன ணியில் அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய பதவிகளுக்கு புதிய நியமன ங்கள் மேற்கொள்ளப்பட்ட துடன், தேசியப்பட்டியல் பாரா ளுமன்ற உறுப்புரிமைக்காக கட்சித் தலைவர் ரணில் விக் கிரமசிங்கவை பெயரிட வேண் டுமென்றும் இணக்கம் காண ப்பட்டிருந்தது.

இதன்படி, அது குறித்து கட்சித் தலைவரின் கருத்து கோரப்பட்டுள்ள நிலையில், அவரின் தீர்மானம் கிடைத் ததை அடுத்து, அதனை சபாநாயகருக்கு பெயரிட்டு அனு ப்புவதற்கும் நடவடிக்கை மேற் கொள்ளப்படவுள்ளது. (நி-4)

# மேலும் 5 இலட்சம் தடுப்பூசிகள் அடுத்த வாரம் இலங்கைக்கு




(கொழும்பு)

சனத் தொகையில் 9 மில்லியன் மக்களுக்கு வழங்குவதற்கான கொவிட் தடுப்பூசி தொகையில் முதல் கட்டமாக 5 இலட்சம் தடுப் பூசிகள் 7 நாட்களுக்குள் கிடைக்கவுள்ளதாக இரா ணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரி வித்துள்ளார்.

நேற்றுக் காலை ஊடகம் ஒன்றிற்கு கருத்துத் தெரிவிக் கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் வாரம் முதல் சாதாரண மக்களுக்கு தடுப் பூசியை வழங்க முடியும் எனவும் அவர் தெரிவித் துள்ளார்.

அத்துடன் உலக சுகா தார அமைப்பினால் இலங் கைக்கு தடுப்பூசிகள் வழங் கப்படவுள்ளதாகவும் அவை மார்ச் மாத ஆரம்பத்தில் கிடைக்கப் பெறும் என வும் அவர் தெரிவித்துள் ளார். (நி-4)

# இலங்கையிலும் பா.ஜ.க. அமித்ஷா கருத்தால் சர்ச்சை

(கொழும்பு)

இந்திய உள்துறை அமை ச்சர் அமித்ஷாவிற்கு நேபாள த்திலும் இலங்கையிலும் பார திய ஜனதா அரசாங்கத்தினை அமைக்கும் திட்டமுள்ளது என திரிபுரா முதல்வமைச்சர் பிப் லாப் டெப் தெரிவித்துள்ள கருத்தி னால் தற்போது சர்ச்சை ஏற் பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை திரிபு ராவிற்கு விஜயம் மேற் கொண்ட இந்திய உள்துறை அமைச்சர், இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் வெற்றி பெற்ற பின்னர் பா.ஜ. கவிற்கு இலங்கையிலும் நேபா ளத்திலும் அரசாங்கத்தை அமைக்கும் எண்ணமுள்ளது என குறிப்பிட்டார் என முதல மைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கையிலும் நேபாளத்திலும் எங்களது கட்சியை விஸ்தரிக்க வேண் டும். அங்கு ஆட்சியை அமை ப்பதற்காக வெற்றிபெற வேண் டும் எனவும் அமித்ஷா கூறிய தாக முதலமைச்சர் தெரிவித் துள்ளார்.

இதேவேளை திரிபுரா முதலமைச்சர் தெரிவித்துள்ள கருத்து குறித்து மத்திய அரசா ங்கம் விளக்கம் அளிக்க வேண்டும் என திரிபுராவின் எதிர்க்கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

முதலமைச்சருக்கு ஜன நாயகம் மற்றும் அரசமைப்பு குறித்து எதுவும் தெரியாது என குறிப்பிட்டுள்ள எதிர்க்கட்சி, அமித்ஷாவின் கருத்துக்கள் வெளிநாடு ஒன்றின் உள்விவ காரங்களில் தலையிடுவதற்கு சமம் எனவும் குறிப்பிட்டு ள்ளது. (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நட்புறவு

இங்கிலாந்து தேசத்தில் ஒரு இளைஞன் இருந்தான். அவன் பெயர் ஜான். ஜேர்மனியில் மிஸ் மேரி என்று ஒரு பெண். இந்த இரண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்தது இல்லை. ஆனால் நண்பர்கள். பேனா நண்பர்கள். ஒருத்தருக்கு ஒருத்தர் கடிதம் எழுதிக் கொள்வது அவ் வளவு தான்.

பல ஆண்டுகள் தொடர்ந்து கடிதம் எழுதிக் கொண்டி ருந்தார்கள். ஒரு கட்டத்திலே மேரி எப்படி இருப்பாள் என்று பார்க்க வேண்டும் என்கின்ற ஆர்வம் அதிகமாகியது. ஜான் உடனே ஒரு கடிதம் எழுதினான் மேரிக்கு. உன்னு டைய புகைப்படம் ஒன்று அனுப்பி வை என்று எழுதினான்.

மேரியிடம் இருந்து பதில் வந்தது. ஆனால் புகைப்படம் வரவில்லை. அந்தப் பெண் ஏதோ காரணம் சொல்லிப் புகைப் படம் அனுப்பவில்லை. இதற்கு இடையில் உலகப் போர் ஆரம்பமாகி விட்டது.

அதனால் கடிதப் போக்குவரத்து நின்று போய்விட்டது. ஒருத்தருக்கொருத்தர் என்ன ஆனார் கள் என்று தெரிந்து கொள்ள முடியாமல் போய்விட்டது.

உலகப் போர் ஒரு வழியாக முடிந்தது. அதன் பின்பு இந்த இளைஞன் ஜேர்மனிக்குப் போகக் கூடிய வாய்ப்பு வந்தது. மிகவும் ஆர்வமாகப் போனான்.

அந்தப் பெண் மேரி எப்படி இருக்கின்றாளோ...? என்ன ஆனாளோ! முகவரி மட்டும் கையிலே இருக்கிறது. அதை வைத்துக் கொண்டு அந்த இடத்தைத் தேடிக் கண்டு பிடித்து போய் சேர்ந்து விட்டான்.

அங்கே போய் பார்த்தால் மேரியின் வீடு இடிந்து கிடக் கிறது. குண்டு வீச்சினால் அப்படி ஆகிவிட்டது. சிதைந்து போன அந்த வீட்டிலே யாருமே இல்லை. அக்கம் பக்கத் திலே விசாரித்தான்.

அவர்கள் தான் விபரம் சொன்னார் கள். மேரி இறந்து போய்விட்டார். மேரிக்கு வயது 80 ஆம். ஆமாம் 80 வயது மூதாட்டி. அந்த அம்மா இறந்து போவதற்கு முன்னர் பேனா நண்பர் ஜானுக்காக ஒரு கடிதம் எழுதியிருந்தார். அவர் என்ன எழுதியிருந்தார் தெரியுமா?

என் இனிய நண்பரே! நான் ஏன் புகைப்படம் அனுப்ப வில்லை என்பது இப்பொழுது புரிந்ததா? ஒரு வேளை நான் அனுப்பியிருந்தால் உங்கள் இளமைக் கனவுகளை எனக்கு எழுதியிருக்க மாட்டீர்கள். நானும் அதை யெல்லாம் படித்து ரசித்திருக்க மாட்டேன். நன்றி நண்பரே என்று எழுதி இருந்தாராம். இது உண்மையாக நடந்த ஒரு சம்பவம். நட்பு பலவகை. அதிலே இது ஒரு வகை.

பாடசாலை நட்பு, அலுவலக நட்பு, பேனா நட்பு , பயண நட்பு , ரேடியோ நட்பு இப்படி பலவகை நட்புகள் உலகத்திலே உண்டு.

நட்பு என்பது வேறு, உறவு என்பது வேறு. நண்பர்கள் அறிமுகமாகின்றவர்கள். உறவினர்கள், உடன் பிறப்பால்.. திருமணத்தால் நம்மோடு சம்பந்தப்படுகின்றவர்கள். நட்பு துண்டிக்கப்படலாம், உறவு ஒட்டிக் கொண்டே தான் இருக் கும்.

இவன் நேற்று வரைக்கும் எனக்கு நண்பனாக இரு ந்தான். இன்றைக்கு விரோதி ஆகிவிட்டான் என்று சொல் லலாம். இவர் நேற்று வரைக்கும் எனக்கு சித்தப்பாவாக இருந்தார். இன்றையிலிருந்து வேறு ஆளாக ஆகிவிட்டார் என்று சொல்ல முடியாது.

உண்மையான நட்பு-உறவு மாதிரி ஆக வேண்டும். அது தான் நட்புறவு. அது எப்படி இருக்க வேண்டும் என்று வள்ளுவர் சொல்கின்றார்.

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு

என்கின்றார். இந்தக் காலத்திலேயெல்லாம் எத்த னையோ விதமான நட்புறவுகள். இரண்டு பேர் முதலில் பேனா நண்பர்களாக இருந்தார்கள். பின்பு நேரிலே சந்தித்தார்கள். நட்பு நட்புறவு ஆகிவிட்டது.

அந்த இரண்டு பேரிலே ஒருத்தன் சொன்னான்... இவனை என் கூடப் பிறந்த சகோதரனாகவே வைத்துக் கொண்டேன் சேர் அதுதான் இப்பொழுது இடைஞ்சலாகிப் போய்விட்டது என்றான். எப்படி என்று கேட்டேன்.

இப்பொழுது அவன் என் சொத்திலே பாதிப் பங்கு கேட்கின்றான் சேர் என்றான்.

# அமெரிக்காவின் சிக்கல் நிறைந்த ஜனாதிபதித் தேர்தல் முறைமையும் சர்ச்சைகள் நிறைந்த ஜோ பிடனின் பதவிப் பிரமாணமும் -2021

06


கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



**அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் 2020 குடியரசுக்கட்சி வேட்பாளர்கள்**



டொனால்ட் ட்ரம்ப்
ஜனாதிபதி வேட்பாளர்



மைக் பென்ஸ்
துணை ஜனாதிபதி வேட்பாளர்

இந்த இரண்டு கட்சிகளும் மொத்தம் 309 மாநில அளவிலான கட்சிகளில் 102 ஆகும். (அதாவது ஜனநாயகக் கட்சி 50 மாநிலங்கள் மற்றும் வோஷிங்டன், டி.சி. அதுபோல் குடியரசுக் கட்சி 50 மாநிலங்கள் மற்றும் வோஷிங்டன், டி.சி.ஆக 102 அதுபோல் மாநில அளவிலான கட்சிகள்).


அதுபோல் லிபர்டேரியன் கட்சியும் 50 மாநிலங்கள் மற்றும் வோஷிங்டன், டி.சி.ஆகியவற்றில் அங்கீகாரம் பெற்றிருந்தது. மாநில அளவில் மொத்தமாக வாக்குச்சீட்டில் பெயர் எழுதப்படும் வேட்பாளர்களாக 425 அரசியல் கட்சிகளும் சுயேட்சைகளும் மொத்தமாக இருந்தன.

இந்நடைமுறையில் 2020 ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கு பின்வருவோர் அவரவர் கட்சிகளின் சார்பில் ஜனாதிபதி மற்றும் துணை ஜனாதிபதி பதவிகளுக்கு போட்டியிட்டனர். குடியரசுக் கட்சி சார்பில் ட்ரம்பும் மைக்பென்சும் ஜனநாயகக் கட்சி சார்பில் ஜோ பிடனும் கமலா ஹாரிசும் தெரிவு செய்யப்பட்டனர்.

இத்தேர்தலில் ஜனநாயகக் கட்சி 81,268,754 **(51.3%)** வாக்குகளையும் குடியரசுக் கட்சி 74,216,721 **(46.9%)** வாக்குகளையும் லிபர்டேரியன்கட்சி 1,864,720 **(1.2%)** வாக்குகளையும் பசுமைக்கட்சி 402,715 **(0.3%)** வாக்குகளையும் பெற்றன. மற்றைய ஒவ்வொரு கட்சியும் அல்லது ஒவ்வொரு வேட்பாளரும் ஒரு இலட்சத்திற்கு குறைந்த வாக்குகளையே பெற்றன.

இதில் ஒரு ஜனாதிபதி வேட்பாளர் **(Zachary Scalf/Matthew Lyda)** ஒரு மாநிலத்தில் (வேர்மாண்ட் மாநிலம்) மட்டும் சுயேட்சையாகப் போட்டியிட்டு பெற்ற வாக்குகளின் எண்ணிக்கை 29 ஆகும். மேலும் எந்தவொரு மாநில வாக்குச்சீட்டிலும் பெயர் அச்சிடப்படாத 91 ஜனாதிபதி வேட்பாளர்களும் சேர்ந்து பெற்ற மொத்த வாக்குகள் 182,856 ஆகும். அமெரிக்கத் தேர்தல் வரலாற்றில், இம்முறை நடந்த தேர்தலில்

**அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் 2020 ஜனநாயகக்கட்சி வேட்பாளர்கள்**



ஜோ பிடன்
ஜனாதிபதி வேட்பாளர்



கமலா ஹாரிஸ்
துணை ஜனாதிபதி வேட்பாளர்

தான் அதிக வாக்குகள் பதிவு செய்யப்பட்டிருந்தன. இதில், பிடன் 81 மில்லியன் வாக்குகளுக்கு மேல் பெற்றுள்ளார். இந்த அளவுக்கு வேறெந்த ஜனாதிபதி வேட்பாளரும் மிகப்பெரிய அளவில் வாக்குகளைப் பெற்றிருக்கவில்லை.


**இத்தேர்தலில் ஜனநாயகக் கட்சி 81,268,754 (51.3%) வாக்குகளையும் குடியரசுக் கட்சி 74,216,721 (46.9%) வாக்குகளையும் லியர்டேரியன் கட்சி 1,864,720 (1.2%) வாக்குகளையும் பசுமைக் கட்சி 402, 715 (0.3%) வாக்குகளையும் பெற்றன. மற்றைய ஒவ்வொரு கட்சியும் அல்லது ஒவ்வொரு வேட்பாளரும் ஒரு இலட்சத்திற்கு குறைந்த வாக்குகளையே பெற்றன.**

நெவாடா மாநிலத்தில் "எல்லாவற்றிற்கும் எதிரானது" அல்லது "கீறல்" வாக்கு என்றும் அழைக்கப்படும் "மேலே எதுவும் இல்லை **(None Of The Above)**", அல்லது சுருக்கமாக நோட்டா **(NOTA)** உள்ளது. இங்கு வேட்பாளரின் பெயர் எழுதப்படும் இடத்தில் இந்த "வேட்பாளர்களில் எவருமில்லை **(None of these candidates)**" என்று எழுதப்பட்டிருக்கும். இது வாக்காளர் வாக்களிக்க மறுப்பதைக் குறிக்கவும் அனுமதிக்கவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஒரு தேர்தலில் ஒருவர் தன் சம்மதமின்மையைத் தெரிவிக்க அவ்விடத்தில் வாக்களிக்க முடியும். அதாவது ஒரு தேர்தலை நடத்த வாக்காளரின் சம்மதம் தேவைப்படுகிறது என்ற கொள்கையின் அடிப்படையில் இது அமைந்துள்ளது. நோட்டா பெரும்பான்மை அல்லது வாக்குகளின் பெரும்பகுதியைப் பெற்றால் அது (நோட்டா) தேர்தலில் "வெற்றி" பெறுகிறது.

அவ்வாறான நிலையில் அத்தொகுதி நிரப்பப்படாமல் காலியாக இருக்க வழிசமைத்து விடும். 2020 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் நெவாடா மாநிலத்தில் "வேட்பாளர்களில் எவருமில்லை **(None of these candidates)**" என்பதற்கு 14,079 வாக்குகள் கிடைத்தது குறிப்பிடத்தக்கதாகும்.

பசுமைக் கட்சி
ஜனாதிபதி வேட்பாளர்



ஹோவர்ட் கிரெஷாம்
ஹாக்கின்ஸ்

சுதந்திரக் கட்சி
ஜனாதிபதி வேட்பாளர்



ஜோன் மேரி
ஜோர்கென்சன்

**நெவாடா மாநிலத்தில் "எல்லாவற்றிற்கும் எதிரானது" அல்லது "கீறல்" வாக்கு என்றும் அழைக்கப்படும் "மேலே எதுவும் இல்லை (None Of The Above)", அல்லது சுருக்கமாக நோட்டா (NOTA) உள்ளது. இங்கு வேட்பாளரின் பெயர் எழுதப்படும் இடத்தில் இந்த "வேட்பாளர்களில் எவருமில்லை (None of these candidates)" என்று எழுதப்பட்டிருக்கும். இது வாக்காளர் வாக்களிக்க மறுப்பதைக் குறிக்கவும் அனுமதிக்கவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒரு தேர்தலில் ஒருவர் தன் சம்மதமின்மையை தெரிவிக்க அவ்விடத்தில் வாக்களிக்க முடியும்.**

மாநில அடிப்படையில் ஜனநாயகக் கட்சியிலிருந்து 306 தேர்வு செய்வோர் அவை உறுப்பினர்களும் குடியரசுக் கட்சியிலிருந்து 232 தேர்வு செய்வோர் அவை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். மற்றைய எந்தவொரு கட்சியிலிருந்தும் தேர்வு செய்வோர் அவை உறுப்பினர்கள் ஒருவரேனும் தெரிவு செய்யப்படவில்லை. இதுபற்றி பின்னர் விரிவாகப் பார்ப்போம்.

### வாக்குச்சீட்டில் ஜனாதிபதி வேட்பாளர்களின் எண்ணிக்கை மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடும்

இலங்கையில் பாராளுமன்றத் தேர்தலை எடுப்போமானால் ஒவ்வொரு மாவட்டத்திலும் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களினது எண்ணிக்கை மாறுபடும். ஆனால் இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் அவ்வாறில்லை.

(தொடரும்...)

# அமைதிக்கான நோபல் பரிசு; பேராயரின் பெயர் பரிந்துரை

(கொழும்பு)


கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை இரண்டாவது முறையாக அமைதிக்கான நோபல் பரிசுக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

நோர்வேயில் வசிக்கும் இலங்கைப் பிரஜையும் பெற்றோலிய புவியியலாளருமான டாக்டர் அமர ரணவீர என்பவரே மல்கம் ரஞ்சித் ஆண்டகையை இவ்வாறு அமைதிக்கான நோபல் பரிசுக்காக பரிந்துரைத்துள்ளார்.



அமைதிக்கான நோபல் பரிசுக்கான பரிந்துரைகள் ஜனவரி 31 நள்ளிரவுடன் நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது.(நி-4)

# ஆலய வழிபாடு ஏன்–எதற்கு – எப்படி



## மங்களம் தரும் மலர்கள்

இறை வழிபாடு மனிதனிடம் என்று தோன்றியதோ அன்றே இறைவனுக்கு மலர்களைப் படைத்து வழிபடும் பழக்கமும் தோன்றி விட்டது.

சங்க காலத்தில் வாழ்ந்த தமிழர்கள் இறைவனுக்கு விதவிதமான மலர்களைச் சூடி அழகு பார்த்தனர். அர்ச்சனை செய்தனர். இதைப் பழங்கால பாடல்கள் மூலம் தெரிந்து கொள்ளலாம். இறை மூர்த்தங்கள் மலர்கள் இல்லாமல் இருக்கக்கூடாது என்பதில் நம் மூதாதையர்கள் உறுதியுடன் இருந்தனர். இதன் காரணமாகவே ஆலயங்கள் அருகே தீர்த்தக் குளத்தையும் நந்தவனத்தையும் நம் முன்னோர்கள் ஏற்படுத்தி இருந்தனர்.

சில குறிப்பிட்ட மலர்கள் அறிவியல் பூர்வமாக மனித குலத்துக்கு நன்மை செய்வதை ஆதி தமிழர்கள் அறிந்திருந்தனர். தாமரை மலர்த்தண்டு குளோரின் வாயு உற்பத்தி செய்வதை கண்டுபிடித்திருந்தனர்.

எனவே குறிப்பிட்ட மலர்களை இறை வழிபாடு தவிர வேறு எதற்கும் பயன்படுத்தக்கூடாது என்று நம் முன்னோர்கள் வரையறுத்து வைத்தனர். குவளை மலரைப் பறித்து பயன்படுத்தக் கூடாது என்ற விதி இப்படித்தான் ஏற்படுத்தப்பட்டது.

உலகில் உள்ள இயற்கை படைப்புகள் அனைத்தும் இறைவனுக்கே சொந்தம் என்ற அடிப்படையில் மலர்கள் இறைவனுக்கு உகந்தவைகளாக் உள்ளன. இயற்கையின் படைப்பில் மலர்களின் இயல்பைப் பார்த்தால் அவற்றின் தியாகத்தை நாம் புரிந்து கொள்ள முடியும். ஓரிரு நாட்களே ஆயுள் கொண்ட மலர்கள் இறைவனுக்காகவே பூத்ததோ என்று எண்ணத் தோன்றும்.

ஆலயங்களில் நறுமணம் ஏற்படுத்தவும் அலங்காரம் செய்யவும் ஆத்மார்த்தமாக வழிபடவும் மலர்களின் பங்களிப்பு நிகரற்றது. மலர்கள் இல்லாத வழிபாட்டை நினைத்துப் பார்க்க இயலாது.

மகிமைகள் பல நிறைந்த பூக்களை இறைவழிபாட்டுக்கு சங்க காலத் தமிழர்கள் பயன்படுத்தியதற்கும் நாம் பயன்படுத்தியதற்கும் நிறைய வித்தியாசங்கள் உள்ளன. சங்க காலத்தில் 99 வகையான பூக்கள் பயன்பாட்டில் இருந்ததை கபிலர் தனது குறிஞ்சிப்பாட்டில் 261 அடிகள் கொண்ட பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த 99 வகை பூக்களில் பல இன்று காணாமல் போய்விட்டன. பல பூக்களை வழிபாட்டுக்கு இப்போது நாம் பயன்படுத்துவதில்லை. மிகச் சொற்பமான வகை மலர்களையே நாம் பயன்படுத்துகிறோம்.

புராணங்கள் புனையப்பட்ட பிறகு ஒவ்வொரு கடவுளுக்கும் இந்தந்த வகைப் பூக்களையே பயன்படுத்த வேண்டும் என்ற நியதி உருவாகி விட்டது. எனவே சில வகை மலர்களின் பயன்பாடு குறைந்து போனது.

என்றாலும் இறைவழிபாட்டுக்கு எனப் பொதுவான மலர்கள் பல உள்ளன. ஒவ்வொரு பருவத்திலும் பூக்கும் இந்த மலர்கள் இன்று இறைவழிபாட்டை அர்த்தமுள்ளதாக ஆத்மார்த்தமானதாக மாற்றியுள்ளன. காய்ந்து போன மலர்கள், மனிதர்களால் முகர்ந்து பார்க்கப்பட்ட மலர்களை ஒருபோதும் இறை வழிபாட்டுக்குப் பயன்படுத்தக் கூடாது. அதுபோல் சுத்தம் இல்லாத இடத்தில் உள்ள பூக்களைத் தொடவே கூடாது.

மலர்களை இறைவனுக்குப் படைக்கும்போது கிள்ளி சாத்தக்கூடாது. முழு மலராகவே சாத்தவேண்டும். இலைகளைக் கிள்ளி சாத்தலாம். வில்வம், துளசி ஆகியவற்றைத் தளமாகவே படைக்க வேண்டும்.

இந்த வரிசையில் எந்தெந்த மலர்களை எந்தெந்த தெய்வத்துக்கு எந்தெந்த நேரத்தில் பயன்படுத்த வேண்டும் என்று நம் முன்னோர்கள் சில முறைகளை வகுத்து வைத்துள்ளனர்.

காலை வழிபாட்டின்போது தாமரை, துளசி, மல்லிகை, நந்தியாவட்டை, முல்லை, மந்தாரை, செண்பகம் ஆகிய மலர்களைக் கொண்டு வழிபடலாம். மதிய நேரத்தில் துளசி, வில்வம், சங்கு புஷ்பம், அரளி, வெண்தாமரை, ஓரிதழ் தாமரை, மருதாணி ஆகியவற்றைக் கொண்டு பூஜை செய்வது நல்லது.

மாலை நேரத்தில் ஜாதிமுல்லை, துளசி, வில்வம், செந்தாமரை, அல்லி, மல்லிகை, மரிக்கொழுந்து போன்ற பூக்களை இறைவனுக்குப் படைத்து வழிபட்டால் மங்களம் உண்டாகும்.

இத்தனை வகை மலர்களில் தாமரைப் பூதான் மிக மிக சிறப்பானதாகப் புராணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. திருமால், மகாலட்சுமியின் மனம் கவர்ந்த தாமரை பூவுக்கு "தெய்வ மலர்" என்றும் ஒரு பெயர் உண்டு. அதனால்தான் தாமரைப் பூவை பெண்கள் தலையில் சூட அனுமதிக்கப்படுவதில்லை.(தொடரும்)

# செய்தித்துளிகள்

## ஹெரோயின்,ரொக்கப் பணத்துடன் வெள்ளவத்தையில் ஒருவர் கைது

(கொழும்பு)

வெள்ளவத்தை, வேலுவனராம பகுதியில் ஹெரோயின் மற்றும் ஒரு தொகை ரொக்கப் பணத்துடன் சந்தேக நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.


இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் டுபாயில் இருந்து செயற்பட்டு வரும் "அசங்க" எனப்படும் போதைப்பொருள் வியாபாரியின் நெருங்கிய நண்பர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து 25 கிராம் ஹெரோயினும் 650,000 ரூபா பணமும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. (நி-4)

## இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் பணிபுரியும் ஊழியருக்குத் தொற்று

(கொழும்பு)

கொழும்பில் அமைந்துள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் பணிபுரியும் இந்திய செயலக ஊழியருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.



இந்தத் தகவலை இந்திய உயர் ஸ்தானிகராலயம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டுள்ள அறிவிப்பொன்றில் உறுதிப்படுத்தியுள்ளது.

தற்சமயம் குறித்த அதிகாரி இலங்கை அரசாங்கத்தினால் பரிந்துரைக்கப்பட்டுள்ள கொவிட் சுகாதார வழிகாட்டல்களின் கீழ் வைக்கப்பட்டுள்ளார் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, உயர்ஸ்தானிகராலய வளாகங்கள் தற்சமயம் கிருமி நீக்கம் செய்யப்பட்டுள்ளன. மேலும் நிலையான நெறிமுறைகளின்படி தேவையான அனைத்து நடவடிக்கைகளும் வலுப்படுத்தப்பட்டுள்ளன எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 240 | 200 |
| உருளைக்கிழங்கு | 120 | 130 | 120 | 130 |
| பச்சைமிளகாய் | 500 | 550 | 550 | 600 |
| தக்காளி | 260 | 260 | 320 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 70 | 50 |
| கோவா | 100 | 90 | 120 | 100 |
| கரட் | 200 | 220 | 220 | 240 |
| பூசணி | 100 | 140 | 130 | 130 |
| புடோல் | 200 | 200 | 200 | 160 |
| வாழைக்காய் | 50 | 60 | 70 | 100 |
| சின்ன வெங்காயம் | 400 | 400 | 450 | 400 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 120 | 120 |
| பாகற்காய் | 180 | 200 | 240 | 300 |
| வெண்டிக்காய் | 250 | 220 | 240 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 | 140 |
| பயற்றங்காய் | 180 | 200 | 280 | 200 |
| லீக்ஸ் | 170 | 150 | 150 | 160 |
| பீற்றூட் | 220 | 250 | 200 | 200 |
| கறிமிளகாய் | 280 | 400 | 400 | 450 |
| முருங்கைக்காய் | — | — | — | — |
| போஞ்சி | 150 | 140 | 140 | 200 |
| கத்தரிதம்புள்ள | 180 | 150 | 200 | 160 |
| கீரை - 1 பிடி | 60 | 50 | 60 | 60 |
| தேசிக்காய் | 100 | 120 | 130 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 80-100 | 80-110 |
| இராசவள்ளி | 250 | 240 | 220 | 220 |
| வெங்காயப்பூ | 200 | 150 | 240 | 200 |
| முள்ளங்கி | 140 | 100 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 50 | 40 |
| வல்லாரை | 20 | 140 | 20 | 30 |
| ஈரப்பலா | 130 | 100 | 80 | 80 |

# இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 30கிலோ மூக்குப்பொடி இராமேஸ்வரம் சுங்கத்துறையினரால் பறிமுதல்



(இராமேஸ்வரம்)
மண்டபம் அருகே உள்ள வேதாளை கடற்கரையில் இருந்து இலங்கைக்கு கடத்த இருந்த 30 கிலோ மூக்குப் பொடி பண்டல்கள் மண்டபம் சுங்கத்துறை அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் அருகே உள்ள வேதாளை குயவன் தோப்பு பகுதியில் இருந்து இலங்கைக்கு மூக்குப் பொடி பண்டல்கள் கடத்த இருப்பதாக இராமேஸ்வரம் சுங்கத்துறை அதிகாரிகளுக்கு கிடைத்த ரகசிய தகவலையடுத்து சுங்கத்துறை அதிகாரிகள் ரோந்து நடவடிக்கையை மேற்கொண்டனர்.

அப்போது வேதாளை குயவன் தோப்பு கடற்கரையில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நிறுத்தி வைக்கப்பட்ட நாட்டுப்படகு ஒன்றை சோதனை செய்ய முற்பட்டபோது சுங்கத்துறை அதிகாரிகள் வருவதை கண்ட கடத்தல்காரர்கள் இரண்டு பண்டல்களை கடற்கரையில் தூக்கி வீசி விட்டு தப்பிச் சென்றனர்.

கைப்பற்றப்பட்ட 2 பண்டல்களில் 100 அட்டை பெட்டிகளில் சுமார் 30 கிலோ மூக்குப் பொடிகள் இருந்துள்ளது.

தப்பிச் சென்றவர்களை பொலிஸார் தேடி வருகின்றனர். (5-4-285)

# வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)
கீரிமலை ஸ்ரீ மகாமுத்து மாரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்தும் 12 தினங்கள் இடம்பெறவுள்ள இம் மஹோற்சவத்தில் எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் தேர்த் திருவிழாவும் மறுநாள் 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை மாசிமகத் தீர்த்தோற்சவமும் எதிர்வரும் 1 ஆம் திகதி கப்பல் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

இதேவேளை, காலை, மாலை உற்சவங்களாக மஹோற்சவம் இடம்பெறும் எனவும், அடியவர்கள் அனைவரும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி மஹோற்சவத்தில் கலந்து கொள்ள முடியும் எனவும் மேற்படி ஆலய ஆதீன ஹர்த்தாவும்,பிரதம குருவுமான சிவ ஸ்ரீ நகுலநவராஜ ந.உமாபதீஸ்வரக் குருக்கள் அறிவித்துள்ளார். (5-4-18)

# இரண்டாயிரத்து 500 கிலோ கழிவுத் தேயிலையுடன் ஒருவர் கைது

(கொட்டகலை)
சுமார் 2500 கிலோ கிராம் கழிவு தேயிலை தூளுடன் கொட்டகலை கொமர்ஷல் பகுதியில் இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தலவாக்கலை பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் நேற்று நண்பகல் 12 மணியளவில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த கழிவுத் தேயிலை தூளானது அனுமதிப் பத்திரம் இன்றி கொட்டகலை பகுதியிலிருந்து கம்பளை பகுதிக்கு கொண்டு செல்லும் போது விசேட அதிரடிப்படையினரால் இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திம்புள்ள -பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-4)

# கடந்த வருடத்தில் 685 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

(குருமன்காடு)
வவுனியா மாவட்டத்தில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினால் கடந்த ஒரு வருடத்தில் 1050 வர்த்தக நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது 685 வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளின் போது விலைக்குறிப்பினை அகற்றுதல், உருவழிக்கின்ற அல்லது விலை மாற்றம் குறிக்கப்பட்ட விலைக்கு மேலதிகமாக விற்பனை, எஸ்.எல்.எஸ்.தரச்சான்றிதல் பொறிக்கப்படாத பொருளை விற்பனை செய்தல் அல்லது களஞ்சியப்படுத்தல் போன்ற குற்றச்சாட்டுக்களுக்காகவே 685 வர்த்தக நிலையங்ளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என வவுனியா மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை அறிவித்துள்ளது. (5-4-6-250)

# பத்து மில்லியன் ரூபாவில் அபிவிருத்தி முன்னெடுப்பு

(கண்டாவளை)
கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஆண்டு கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினூடாக 10 மில்லியன் ரூபாய் நிதி கிடைக்கப்பெற்று அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மேற்படி திணைக்கள தகவல்கள் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையிலே கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் கடந்த ஆண்டு அபிவிருத்தி வேலைகளுக்கு 10 மில்லியன் ரூபாய் நிதி கிடைக்கப்பெற்று குறித்த அவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மேற்படி திணைக்கள தகவல்கள் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

அதாவது குறிப்பாக உமையாள்புரம் கழிவு வாய்க்கால் புனரமைத்தல், உருத்திரபுரம் கழிவு கால்வாய்கள் புனரமைத்தல் ஆகிய வேலைகள் உள்ளடங்கலாக கிளிநொச்சி, இராமநாதபுரம், பூநகரி, உருத்திரபுரம் ஆகிய கமநல சேவை நிலையங்களின் கீழ் மேற்படி வேலைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-4-315)



வவுனியா மணிப்புரம் கிராமிய பொதுச்சந்தையை வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவருமான கு. திலீபன் நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

இந் நிகழ்வில் கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் பிரதேச சபை உத்தியோகத்தர், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



கிளிநொச்சி விநாசியோடை மகா வித்தியாலய புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான பாராட்டு நிகழ்வும் மாணவர் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வும் அதிபர்.நா.கண்ணதாசன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக கெயின் கல்வி நிலைய முன்னாள் இயக்குநர் ம.தேவநாயகம் கலந்து கொண்டார்.(படம்: மகாலிங்கம்)



தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கின்சிலி கேரத்தின் ஒழுங்குபடுத்தலில் நேற்று முன்தினம் இரத்ததான முகாம் இடம்பெற்றது. (படம்: தேவானந்தன்)

# கஞ்சாவுடன் இருவர் கைது

(நெளுக்குளம்)
வவுனியாவில் கேரள கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த இருவரை வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு வவுனியா இறம்பைக்குளம் மற்றும் ஆச்சிபுரம் பகுதிகளில் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் அடிப்படையில் ஒரு கிலோ 300 கிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. (5-4-299)

தவறு ஒன்றுதான் அரசின் தயவை வேண்டும். உண்மைக்கு அது வேண்டியதில்லை.
– தாமஸ் ஜெபர்ஸன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் இனத்தை வஞ்சிப்பதற்காய் நாட்டைத் தாரைவார்க்கும் வல்லினமே!

இலங்கை பெளத்த சிங்கள நாடு. இங்கு தமிழர்கள் இரண்டாம் தரப் பிரஜைகளாக வாழலாம் என்பது சிங்களப் பேரினவாதத்தின் மூலதத்துவம்.

இதனை முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஒரு முறை பகிரங்கமாகவே கூறியிருந்தார்.

ஆக, இலங்கை நாட்டின் பூர்வீகக் குடிகளான தமிழ் இனத்தை வேரறுக்க வேண்டும் என்ற ஒரே நோக்கில், இலங்கை ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுக்கு எதிராகக் கொடும் போர் தொடுத்தனர்.

இந்த நாட்டின் மக்கள் என்றும் பாராமல், தமிழ் மக்களைக் கொன்று குவித்த கொடுஞ் செயல் சிங்கள இனத்துக்கு என்றும் கறை படிந்த பக்கம் என்பதை எவராலும் மறுக்க முடியாது.

இவை ஒருபுறமிருக்க, பெரும்பான்மை இனம் என்ற ஒரே காரணத்துக்காக இந்த நாட்டை பெளத்த சிங்களத்துக்கு உரித்தாக்குகின்ற மிலேச்சத்தனத்தின் பாதகத்தை இப்போது இலங்கை அனுபவிக்கத் தொடங்கி விட்டது.

ஆம், 73ஆவது சுதந்திர தினத்தைப் பெருமெடுப்பில் கொண்டாடிவிட்டு, கிழக்கு முனையத்தையா? மேற்கு முனையத்தையா? இந்தியாவுக்குக் கொடுப்பது.

தீவகத்தை சீனாவுக்கு கொடுப்பதா? அல்லது இந்தியாவிடம் கையளிப்பதா? என அமைச்சரவை கூடித் தீர்மானிக்கின்ற அளவிலேயே இலங்கையின் நிலைமை உள்ளது.

இந்தப் போக்கணகேட்டில் சரத் வீரசேர போன்றவர்கள் இனவாதம் பேசி பெளத்த சிங்களத்துக்கு தங்களை அர்ப்பணிப்பதான காட்டாப்புகளும் நடந்தாவதுதான் வேடிக்கை.

தன் நாட்டின் இறைமையைப் பாதுகாக்க முடியாமல் சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இதர வெளிநாடுகளுக்கும் நாட்டைப் பங்கிடுகின்றவர்கள் இன்னமும் பேரினவாதத் தீயை மூட்டுகின்றனர் எனில் இவர்களை என்னவென்று கூறுவது.

தமிழீழ விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதற்கு உலக நாடுகளிடம் கையேந்தி ஆயுதம் வாங்கி போர் நடத்தி பெற்றது வெற்றி என்று இறுமாப்படைந்த சிங்களத் தரப்புகள்.

இப்போது நாட்டின் பகுதிகளை சீனாவுக்கும் இந்தியாவுக்கும் கொடுக்க வேண்டிய கட்டத்துக்கு வந்துவிட்டன.

உலக நாடுகள் எங்களை எதுவும் செய்ய முடியாது என்று மார்தட்டிய இலங்கையின் ஆட்சியாளர்கள்; முடிந்தால் சீனாவிடமும் இந்தியாவிடமும் உங்களுக்கென்ன வேலை இங்கு என்று கேட்கட்டும் பார்க்கலாம்.

அந்தோ! தன் சொந்த நாட்டு மக்களை வஞ்சிப்பதற்காக மொத்த நாட்டையுமே தாரை வார்க்கும் சிங்கள வல்லினமே! நீ எப்போது தான் திருந்தப் போகின்றாய்.

# சமுர்த்தி நிவாரணம் பெற தகுதியானவர்களை இணைத்துக் கொள்ளும் செயற்பாடுகள் ஆரம்பம்

(கொழும்பு)

**புதிதாக சமுர்த்தி பயனாளிகளை இணைத்துக்கொள்வதில் அரசியலுக்கு அப்பால் ஒழுங்கு முறையான வேலைத்திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**

இந்தப் புதிய நடைமுறையின் கீழ் பல்வேறு காரணங்களினால் பிரதேச செயலாளர் மட்டத்தில் வெளியேறும் சமுர்த்தி பயனாளிக்ளின் குடும்பங்களுக்காக தகுதிகளை கொண்ட புதிய குடும்பப் பயனாளிகள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இதற்கான சுற்றறிக்கை ஒன்று கடந்த 11 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

இதற்கமைவாக விரைவாக புதிய சமுர்த்திப் பயனாளிகளை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளது.

அத்தோடு மார்ச் முதலாம் திகதி தொடக்கம் இவர்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கும் பணி ஆரம்பிக்கப்படும். (நி-4)

## பாடசாலைகளில் நிகழ்ச்சிகளை நடத்த மீள் அறிவித்தல் வரை தடை விதிப்பு

### கல்வியமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

கொரோனா தொற்றுப் பரவல் நிலைமையைக் கருத்திற்கொண்டு பாடசாலைகளில் நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு மீள் அறிவித்தல் வரை தடை விதிக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அனைத்து மாகாண, வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் பாடசாலை அதிபர்களுக்கும் கல்வியமைச்சின் செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 17 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**யாழ்.பிரதேசத்தில்** வில்லூன்றி, நாவாந்துறை ஆகிய இடங்களிலும்,

**வவுனியா பிரதேசத்தில்** குடாகச்சக்கொடிய கிராமம், புதிய சின்னக்குளம் கிராமம், கொறவப்பொத்தானை வீதி, றம்பைக்குளம், சூசைப்பிள்ளையார் குளம், முதலாம் குறுக்குத் தெரு, 2ஆம் குறுக்குத்தெரு, பஸார் வீதி, இலுப்பையடிச்சந்தி, மில் வீதி, எஸ்.வி.ஆர். அரிசி ஆலை, இராணி அரிசி ஆலை, லங்கா அரிசி ஆலை, ஓவியா விடுதி, வீரபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## காணாமல் போனோர் தொடர்பான விவகாரம் வீரசேகரவின் கருத்து அதிர்ச்சியளிக்கிறது

### ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

காணாமல் போனோர் குறித்த அலுவலகம் இயங்குவதையும் நட்டஈடு வழங்கப்படுவதையும் விரும்பவில்லை என்று அமைச்சர் சரத் வீரசேகர கூறியிருப்பது மிகுந்த அதிர்ச்சியளிக்கிறது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து ஊடகம் நாளிதழ் ஒன்றுக்கு தெரிவித்துள்ள அவர், பாதிக்கப்பட்டவர்களுக்கான இழப்பீட்டை வழங்குவது மனிதாபிமான அடிப்படையிலான நடவடிக்கையாகும் அதற்கு எதிர்ப்பை வெளியிடுவதென்பது ஒட்டுமொத்த நல்லிணக்க செயற்பாடுகளையும் எதிர்ப்பதற்கு ஒப்பானதாகும் என்றும் ஹர்ஷ தெரிவித்தார். (நி-4)

## நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட சிலருக்கு அழைப்பாணை

(கொழ்பு)

விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ உட்பட சிலருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

கிரிக்கெட் நிறுவனத்திற்கு புதிய அரசியலமைப்பு ஒன்றை தயாரிக்குமாறு தாக்கல் செய்த மனு தொடர்பில் கருத்து தெரிவிப்பதற்காக மார்ச் மாதம் 15 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (நி-4)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## விரலால் கூட தீண்டாதீர்கள்

❖ ஆயிரம் ஆண்டுகள் கங்கையில் நீராடியிருக்கிறேன், காய்கறி உணவை மட்டுமே சாப்பிட்டு வருகிறேன் என்று

❖ நீ சொல்வதனால் ஆன்மிகவாதியாகிவிட மாட்டாய். இதெல்லாம் உன் பெருமையை பறைசாற்றவே உதவும்.

❖ ஆயுள் முழுவதும் நல்ல நூல்களைப் படிப்பதாலும், பேரறிஞர் ஆவதாலும் ஒருவன் ஆன்மிக உணர்வைப் பெற முடியாது. சொற்பொழிவு நிகழ்த்தி கூட்டம் சேர்ப்பதும் ஆன்மிகப் பேற்றை அடைய உதவாது. அன்பின் மூலமாகத் தான் ஆன்மிக உணர்வைப் பெற முடியும். அன்பிற்கே அத்தகைய வலிமை இருக்கிறது.

❖ மனதையும் உடலையும் பலவீனப்படுத்தும் எந்தப் பொருளையும் உன் விரலால் கூட தீண்டக்கூடாது. அதற்குரிய பக்குவத்தை நீ பெற்றால் தான் ஆன்மிகத்தின் நுனியிலாவது கால் வைக்க முடியும்.

❖ ஆன்மிக உணர்வைப் பெறாத வரை நம் நாடு நிச்சயமாக மறுமலர்ச்சி அடையாது. நாட்டை முன்னேற்ற பாதையில் கொண்டு செல்ல, ஆன்மிக வழிகளை பின்பற்றி நடக்க உறுதியெடுக்க வேண்டும்.

# மாசி மாத இராசி பலன்கள்

## 13.02.2021-13.03.2021



மிதுன இராசி வாசகர்களே!

சார்வரி வருடம் மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன் அஷ்டமத்தில் சஞ்சரிக்கின்றார். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் மறைவிடத்தில் இருக்கும்பொழுது யோகத்தை வழங்கும் என்பார்கள். பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். என்றாலும், அஷ்டமத்தில் சனி, குரு ஆகிய கிரகங்களும் இருப்பதால் விரயங்களும் அதிகரிக்கும்.

### கூட்டுக்கிரக சேர்க்கை

உங்கள் இராசிக்கு 8 ஆம் இடத்தில் இராசிநாதன் புதனோடு, 7, 10 க்கு அதிபதியான குருவும், 8, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனியும், 5, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரனும் இணைந்து இருக்கின்றார்கள். இதன் விளைவாக குடும்பத்தில் நிம்மதியின்மை அதிகரிக்கும். தொழிலில் நண்பர்கள் நம்பிக்கைக்குரிய விதம் நடந்து கொள்ள மாட்டார்கள். அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் நடைபெறுவதால், எதிலும் நிதானத்தோடு செயற்படுவது நல்லது.

### மகர புதனும், கும்ப புதனும்

மாதத் தொடக்கத்தில் புதன், மகர இராசியில் வக்கிர இயக்கத்தில் இருக்கின்றார். பெப்ரவரி 14 ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகின்றார். 4 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் புதன் விளங்குவதால், அவர் வக்கிரம் பெறும்பொழுது ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். திடீர் இடமாற்றம், வீடு மாற்றம், உத்தியோக மாற்றம் உண்டு. மார்ச் 7 ஆம் திகதி கும்ப இராசிக்குப் புதன் செல்கின்றார். இக்காலத்தில் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். வெளிநாட்டிலிருந்து அனுகூலச் செய்தி உண்டு.

இராஜயோகம் செயற்படும். எனவே திட்டமிடாது செய்யும் சில காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். திடீர் மாற்றங்கள் நல்ல விதத்தில் அமையும். அதிகாரிகளால் நன்மைகள் கிடைக்கும்.

### மகர குருவின் சஞ்சாரம்




மகரத்தில் சஞ்சரிக்கும் குரு பகவான் நீசம் பெற்று சஞ்சரிப்பது ஒருவழிக்கு நன்மை தான். 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதிவலிமை இழக்கும்பொழுது அது நன்மையைச் செய்யும். அதே நேரத்தில் சனியோடு இணைந்து நீச்ச பங்கமும் அடைகின்றார். எனவே சுபச் செலவுகள் அதிகரிக்கும். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். பெப்ரவரி 21 ஆம் திகதி குரு பகவான் அஸ்தமன நிவர்த்தியாவதால், அதன்பிறகு தொழிலில் குறுக்கீடுகள் வரலாம். உத்தியோகத்தில் எதிர்பார்த்த ஊதிய உயர்வு கிடைப்பது தாமதமாகும்.

### கும்ப சுக்கிரனின் சஞ்சாரம்

மாதத் தொடக்கத்தில் மகரத்தில் சஞ்சரிக்கும் சுக்கிரன், பெப்ரவரி 22 ஆம் திகதி கும்ப இராசிக்குச் செல்கின்றார். பஞ்சம, விரயாதிபதியான சுக்கிரன் 9ஆம் இடத்திற்கு வரும் பொழுது பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். பூர்வீகச் சொத்துக்களில் பாகப்பிரிவினைகள் சுமுகமாக நிறைவேறும். இம்மாதம் புதன்கிழமை தோறும் பெருமாள் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் வரவைக் காட்டிலும் செலவு கூடும். அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் நடைபெறுவதால் தடைகளும், தாமதங்களும் உருவாகும். கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. உறவினர்கள், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வதன் மூலமே ஆதாயம் கிடைக்கும். உடல்நலத்தில் கவனம் தேவை. பணிபுரியும் பெண்களுக்கு வேலைப்பளு கூடும். நிதானத்துடன் செயற்பட்டால் நிம்மதி உண்டு.

## விரயங்கள் அதிகரிக்கும்

### ரிஷப செவ்வாயின் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் மாதத் தொடக்கத்தில் லாப ஸ்தானத்தில் இருக்கின்றார். பெப்ரவரி 18 ஆம் திகதி அவர் விரய ஸ்தானத்திற்கு வருகின்றார். 6-க்கு அதிபதி 12 ஆம் இடத்திற்கு வரும் பொழுது விபரீத

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



கடக இராசி வாசகர்களே!

சார்வரி வருடம் மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சந்திரன் தனாதிபதி சூரியனோடு சஞ்சரிக்கின்றார். தனாதிபதி 8 இல் மறைவது அவ்வளவு நல்லதல்ல. மேலும் சப்தம ஸ்தானத்தில் சனி வீற்றிருந்து கண்டகச் சனியாகவும் இருக்கிறார். எனவே மிகமிக கவனத்தோடு செயற்பட வேண்டிய நேரமிது.

### கூட்டுக்கிரக சேர்க்கை

உங்கள் இராசிக்கு சப்தம ஸ்தானத்தில் புதன், குரு, சனி, சுக்கிரன் ஆகிய நான்கு கிரகங்களும் ஒன்று கூடிச் சஞ்சரிக்கின்றார்கள். 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், 6, 9-க்கு அதிபதியான குரு, சப்தம-அஷ்டமாதிபதியான சனியுடன் இணையும் பொழுது மிகமிக கவனமுடன் செயற்படுவது நல்லது.

வாழ்க்கைத் துணை வழியே பிரச்சினைகள் ஏற்படலாம். குடும்பத்தில் ஒருவர் மாற்றி ஒருவருக்கு உடல்நிலை தொல்லைகள் வரலாம். சொத்துக்களால் பிரச்சினைகள் உருவாகலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு கவனச் சிதறல்களும், அதனால் பிரச்சினைகளைச் சந்திக்கக்கூடிய சூழ்நிலையும் ஏற்படும்.

### மகர புதனும், கும்ப புதனும்

மாதத் தொடக்கத்தில் மகர இராசியில் புதன் சஞ்சரிக்கின்றார். வக்கிர இயக்கத்திலும் இருக்கின்றார். பெப்ரவரி 14 ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகின்றார். சகோதர ஸ்தானாதிபதியான புதன் வக்கிரமடைவதால், உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பு குறைவாகவே இருக்கும். மார்ச் 7 ஆம் திகதி கும்ப இராசிக்கு புதன் செல்கின்றார். ஒரு சிலருக்கு திடீர் இடமாற்றங்கள், வீடு மாற்றங்கள் ஏற்படலாம். வீட்டிற்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

### ரிஷப செவ்வாயின் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 5, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் மாதத் தொடக்கத்தில் தொழில் ஸ்தானத்தில் பலம்பெற்றுச் சஞ்சரிக்கின்றார். பெப்ரவரி 18 ஆம் திகதி லாப ஸ்தானத்திற்கு வருகின்றார். எனவே தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மறுக்கப்பட்ட சலுகைகள் மீண்டும் கிடைக்கும். வியாபாரத்தில் நெளிவு, சுளிவுகளை கற்றுக்கொண்டு வருமானத்தை உயர்த்தும் வழியைக் காண்பீர்கள். சொந்தங்களால் வந்த பிரச்சினை அகலும்.




### மகர குருவின் சஞ்சாரம்

மகரத்தில் சஞ்சரிக்கும் குரு பகவான் நீசம் பெற்று சஞ்சரிப்பது ஒரு வழிக்கு நன்மை தான். 6-க்கு அதிபதி நீசம் பெறுவதால் உத்தியோகத்தில் பதவி உயர்வும், ஊதிய உயர்வும் கிடைக்கும். அதே நேரம் 9க்கு அதிபதியாகவும் குரு விளங்குவதால் தந்தை வழியில் சில பிரச்சினைகள் வரலாம். அதிகார பதவி கிடைப்பது போலிருந்து கைநழுவிச் செல்லலாம். பெப்ரவரி 21 ஆம் திகதி மகரத்தில் சஞ்சரிக்கும் குரு அஸ்தமன நிவர்த்தி பெறுவதோடு உங்கள் இராசியையும் பார்ப்பதால் நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும்.

### கும்ப சுக்கிரனின் சஞ்சாரம்

மாதத் தொடக்கத்தில் மகரத்தில் சஞ்சரிக்கும் சுக்கிரன், பெப்ரவரி 22 ஆம் திகதி கும்ப இராசிக்குச் செல்கின்றார் 4, 11-க்கு அதிபதியான சுக்கிரன் கும்பத்தில் சஞ்சரிக்கும் பொழுது, உடல்நலத்திற்காக ஒரு தொகையைச் செலவிடும் சூழ்நிலை உண்டு. வெளிநாட்டிலிருந்து அனுகூலமான தகவல் வந்துசேரும். புதிய வாகனம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். இம்மாதம் சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் கண்டகச் சனியின் ஆதிக்கம் நடைபெறுவதால், எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. விரயங்கள் வந்து அலைமோதும். கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. பிள்ளைகளின் கல்வி சம்பந்தமாகவோ, உத்தியோகம் சம்பந்தமாகவோ எடுத்த முயற்சி பலன் தரும். பணிபுரியும் பெண்களுக்கு மனக்குழப்பங்களும், வேலையில் முழுமையாக ஈடுபாடு செலுத்த முடியாமலும் போகலாம்.

## கவனத்தோடு செயற்பட வேண்டிய நாள்

(தொடரும்...)

## குளிக்கச் சென்ற...

தந்தையான சிங்காரவேல் மனோகரன் ஆவார்.

நேற்றுமுன்தினம் இரவு குளிக்கச் சென்ற இவரை காணவில்லை என தேடியபோது அவர் கொண்டு சென்ற சாரம் மற்றும் சவர்க்காரம் கிணற்றருகில் இருந்ததை அவதானித்த அவர்கள் உடனடியாகவே பொலிஸார் மற்றும் அயலவர்களுக்கு தகவல்களை வழங்கி குறித்த நபரை தேடும் பணி முன்னெடுக்கப்பட்ட போது மேற்படி குடும்பஸ்தர் கிணற்றில் இருந்து சடலமாக காணப்பட்டு கடற்படையின் உதவியுடன் குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது. (ம-3,315,316)

## வடக்கில் 6...

பட்டுள்ளது.

வட மாகாணத்தில் இருந்து பெறப்பட்டிருந்த 793 பேரின் மாதிரிகள் நேற்றைய தினம் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதில் இவ்வாறு ஆறு பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலை தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

பரிசோதனையின் அடிப்படையில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 5 பேருக்கும் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3,18)

## குடும்பஸ்தர்...

ஒருவரின் சடலம் ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த குடும்பஸ்தர் நேற்று முன்தினம் வீட்டில் இருந்துள்ளார். இதன்போது அவரது வீட்டிற்கு அருகில் உள்ள உறவினர் வீட்டில் இரவு முரண்பாடு ஏற்பட்டுள்ளமையை உணர்ந்து அங்கு ஓடிச் சென்றுள்ளார்.

இதன்போது குறித்த பகுதியில் நின்றிருந்த மரத்துடன் தவறுதலாக மோதி அருகிலிருந்த கிணற்றிற்குள் வீழ்ந்து மூழ்கி மரணமடைந்துள்ளார்.

குறித்த சம்பவத்தில் ஈச்சங்குளம் பகுதியைச் சேர்ந்த வேலாயுதம் விஜயகுமார் (வயது - 41) என்ற குடும்பஸ்தரே மரணமடைந்துள்ளார். (ம-3,299)

## ஹெரோயினுடன்...

நேற்று துன்னாலை வேம்படி பகுதியில் நடைபெற்றுள்ளது.

நெல்லியடி இரகசியப் பொலிஸாருக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையில் தேடுதல் நடத்தியபோது துன்னாலை வேம்படி பகுதியில் 750 மில்லி கிராம் ஹெரோயினை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் குறித்த நபர் நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-3,60)

## பொதுமக்களு...

செயற்றிட்டம் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இராணுவ தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா கூறியுள்ளார்.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய தடுப்பூசி ஏற்றும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய, மேல் மாகாணத்திலுள்ளவர்களுக்கான கொரோனா தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இராணுவத் தளபதி கூறியுள்ளார். (ம-3)

## இலங்கையில்...

அலையின்போது 13 பேர் மாத்திரமே உயிரிழந்தனர். இதன்படி கொரோனாவால் இதுவரை மொத்தமாக 397 பேர் உயிரிழந்துள்ளனர். (ம-3)

## பொதுமக்களின்...

செய்கை சபையினர் அடாத்தாக பிடுங்கியமைக்கு எதிராக பளை கரந்தாய் மக்கள் ஏ9 வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் சுமார் ஒரு மணித்தியாலம் ஏ9 வீதி முடங்கியது.

அந்த பகுதியே பெரும் போர்க்களம் போல காட்சியளித்தது.

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட பளை கரந்தாய் கிராமத்தில் 1976ஆம் ஆண்டு மக்கள் குடியேறி இருந்தனர்.

அதன்பின் நாட்டில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தம் காரணமாக பல்வேறு இடங்களுக்கு சென்ற மக்கள் போர் நிறைவடைந்ததன் பின்னர் 2010ஆம் ஆண்டு மீண்டும் கரந்தாய் கிராமத்தில் குடியேறியிருந்தனர்.

அவ்வாறு குடியேறி இருந்த மக்களை தென்னை பயிர்ச்செய்கை சபையினர் மக்கள் குடியேறி இருக்கும் காணி தமக்குரிய காணி எனத் தெரிவித்து 2015இல் மக்களை அவ்விடத்தில் இருந்து வெளியேற்றியிருந்தனர்.

இதனையடுத்து மக்கள் பல்வேறு இடங்களுக்கு சென்று பயன் கிடைக்காத நிலையில் யாழ்ப்பாண மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்திருந்தனர்.

இந்நிலையில் நேற்று அங்கு வந்த தென்னை உற்பத்தி சபையினர் மற்றும் பளை பொலிஸார் மக்கள் கொட்டில் போட்டு குடியிருந்த வீடுகளை அடாத்தாக புடுங்கி மக்களை தாக்கியுள்ளனர்.

இதனையடுத்து, பொலிஸாரால் மற்றும் தென்னை பயிர்ச்செய்கை சபையினரால் பிடுங்கப்பட்ட கொட்டகைகளை மற்றும் தூக்கி வீசப்பட்ட வீட்டு பாத்திரங்களை கரந்தாய் ஏ9 வீதியில் போட்டு வீதியை மறித்து போராட்டத்தினை மக்கள் முன்னெடுத்தனர்.

பிடுங்கப்பட்ட கொட்டகைகளை மீண்டும் அமைத்து தருவதற்கு ஏற்பாடு செய்வதாக மக்களுக்கு பளை பொலிஸார் வாக்குறுதி வழங்கியதையடுத்து மக்கள் போராட்டத்தை கைவிட்டனர். (ம-3)

## ஆட்சி செய்வதாக...

1981ஆம் ஆண்டு முதலாம் இலக்க பாராளுமன்ற சட்டத்துடன் அரசியலமைப்புக்கு அமைய அந்த வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவிற்கு இலங்கையிலும் நேபாளத்திலும் பாரதிய ஜனதா கட்சி அலுவலகத்தை ஸ்தாபிக்கும் திட்டம் உள்ளது என திரிபுரா மாநில முதலமைச்சர் பிப்லாப் டெப் தெரிவித்துள்ளார்.

திரிபுராவில் இடம்பெற்ற நிகழ்வொன்றின்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்போதைய உள்துறை அமைச்சரான அமித் ஷா, பாரதிய ஜனதா கட்சியின் தேசிய தலைவராக இருந்தபோது அகர்தலா மாநில அரச விருந்தினர் மாளிகையில் பல்வேறு தலைவர்களுடன் கலந்துரையாடியிருந்தார்.

இதன்போது, இந்திய மாநிலங்கள் தவிர இலங்கை மற்றும் நேபாளத்திலும் ஆட்சியை விரிவுபடுத்த கட்சி திட்டமிட்டு வருவதாக அமித் ஷா கூறியதாக பிப்லாப் டெப் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், திரிபுரா முதலமைச்சர் வெளியிட்டுள்ள இந்த கருத்து தொடர்பில் பல்வேறு தரப்பினர் தங்களது அதிருப்தியினை வெளியிட்டுள்ளனர். (ம-3)

## 400...

கோவிட் -19 நோய்த் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என்று கண்டறியப்பட்டுள்ளது.

நாட்டில் ஜனவரி மாதம் முதல் நேற்று வரை 76 ஆயிரத்து 428 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம-3)

## அரசி...

திக்கவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் இதனைத் தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கலுக்காக தமிழ் தேசியக் கூட்டமைப்பினால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் தொடர்பில் கலந்துரையாடும் நோக்கிலே இந்த சந்திப்பு இடம்பெறவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (ம-3)

## கோவிட் தடுப்பூசிகளை இந்தியாவிடமிருந்து வாங்க அனுமதி

(கொழும்பு)

கொரோனாத் தடுப்பூசிகளைப் பெறுவதற்காக இந்தியாவுடனான கொள்முதல் ஒப்பந்தத்திற்கு சட்டமா அதிபர் டப்புல டி லிவேரா நேற்று அங்கீகாரம் வழங்கியுள்ளார்.

கொள்முதல் ஒப்பந்தத்தை திருத்தங்களுக்கு உட்பட்டு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பு அதிகாரி அரச சட்டத்தரணி நிஷ்ரா ஜெயரத்ன தெரிவித்துள்ளார். (ம-3)

## உரு திரிபடைந்த...

டினை முடக்குவதற்கு எந்தவொரு அவசியமும் இல்லை என ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய் மற்றும் கோவிட்-19 பரவலை கட்டுப்படுத்தும் இராஜாங்க அமைச்சர் மருத்துவ நிபுணர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலுக்கு பின்னர் ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் வெளிநாடுகளில் இருந்து வருகை தந்தவர்களிடமே உரு திரிபடைந்த வைரஸ் அடையாளங் காணப்பட்டுள்ள நிலையில் அவர்கள் 14 நாட்கள் தனிமைப்படுத்தப்படுகின்றனர்.

அத்துடன் உரு திரிபடைந்த கோவிட்-19 சில இடங்களிலேயே அடையாளங் காணப்பட்டுள்ளது என்றார். (ம-3)

தன நிதானய
திகதி - 2021.02.15
சீட்டிழுப்பு இலக்கம் - 436
B 28 31 33 43
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 15.02.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2694
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள் 11 29 38 59

மஹஜன சம்பத
திகதி 2021/02/15
சீட்டிழுப்பு இலக்கம் 4399
V 9 8 0 1 8 6

மெகா பவர்
திகதி 15/02/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0766
I 04 21 40 43 59

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1667 திகதி 2021.02.15
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கங்கள் 04 31 42 81

அத கோடிபதி
கிழமை: திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 1195
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 15.02.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 108,466,880
வெற்றி இலக்கங்கள் 01 27 48 76 C
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
கிழமை: திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 3525
வர்ணம்: கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 15.02.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 32,858,433
வெற்றி இலக்கங்கள் 01 36 40 64 V
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் 52,74,350/=
திகதி: 15.02.2021
வெற்றி வாரம்: 3076
வர்ணம்: மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 14 35 38 58 சிம்மம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 11,183,140

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1369 நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 15/02/2021 தினம் திங்கட்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் A 10 37 39 40
அடுத்த சுப்பர் ஜக்பொட் 69,022,769/=

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1733
சீட்டிழுப்பு திகதி 15.02.2021
வெற்றி இலக்கங்கள் 02 05 15 44 F
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 21,763,928
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

# கிளிநொச்சி ஏ–9 வீதி வர்த்தகர்களுக்கு

# அரசிடம் காணிப் பத்திரம் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை

## தேவைப்படுவோர் தொடர்பு கொள்ளுங்கள் நீதியரசர் விக்கேஸ்வரன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஏ-9 வீதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களை குத்தகை அடிப்படைக்கு மாற்ற அரசு நடவடிக்கைகள் எடுத்து வருகின்ற நிலையில் அதுதொடர்பில் வர்த்தகர்கள் சார்பில் மேன்முறையீடு செய்து அளிப்புப் பத்திரம் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கையை முன்னெடுத்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர், நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பில் உதவி தேவைப்படுவோர் தனது அலுவலகத்துடன் தொடர்புகொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

இதுதொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் அனுப்பிவைத்த கேள்வி பதில் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.


கிளிநொச்சி ஏ-9 வீதியில் இதுவரை நடத்தி வந்த வர்த்தக நிலையங்களை குத்தகை அடிப்படைக்கு மாற்ற அரசு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றதே. அது பற்றித் தெரியுமா?

**பதில்:** கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்பு கிளிநொச்சி பிரதான வீதியில் வியாபார நிலையங்கள் வைத்துள்ள காணி உரிமையாளர்கள் சிலர் என்னைச் சந்தித்தனர்.

1990களில் அரசினால் வழங்கப்பட்ட, (இன்னும் அளிப்புப் பத்திரங்கள் கொடுக்கப்படாத) கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதான வீதிகளில் அமைந்துள்ள காணிகளில் வியாபார நிலையங்கள் அமைக்கப்பட்ட பகுதிகளை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளதாக அவர்கள் என்னிடம் தெரிவித்தனர்.

அவர்கள் முன்னர் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ்ப் பெற்றுக் கொண்ட காணிகளின் ஏ-9 வீதிப் பகுதியை குத்தகைக்குக் கொடுத்தால் மிகுதிக் காணிகளுக்கு அளிப்புப் பத்திரங்கள் வழங்கப்படும் என்று கூறப்பட்டதாக அறிவித்தார்கள்.

மேற்படி விடயம் தொடர்பாக கரைச்சிப் பிரதேச செயலாளரிடமும் வடக்கு மாகாண காணி



ஆணையாளரிடமும் தொலைபேசியூடாக கதைத்திருந்தோம்.

அதன் அடிப்படையில் குறித்த நடவடிக்கையை நிறுத்தி, காணி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் நிரந்தரமாக அந்தக் காணிகளை உரிமையாளர்களுக்கு கிடைக்கச் செய்வதற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கையாக, இந்த நடவடிக்கைக்கு எதிராக மேன்முறையீடு ஒன்று காணி உரிமையாளர்களின் ஒப்பந்தத்துடன் வடமாகாண காணி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இவ்விடயத்தில் வேறு யாருக்காவது உதவி தேவைப்படின் எனது அலுவலகத்துடன் தொடர்புகொண்டால் அவர்களுக்கான சரியான வழிகாட்டுதல்களை வழங்கமுடியும். எமது தொலைபேசி இலக்கம்: 021 2214295 எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நீதிக்கான பேரணி; ரவிகரனிடம் விசாரணை

(முல்லைத்தீவு)

எமது மக்களுக்காகவும் எமது மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராகவும் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை என்னும் போராட்டத்தில் பங்கேற்றதாக பொலிஸ் விசாரணையின் போது, கூறியதாக வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை என்னும் போராட்டத்தில் கலந்து கொண்டமை தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் ரவிகரனிடம் நேற்று வாக்குமூலம் ஒன்றினைப் பெற்றிருந்தனர்.

பொலிஸ் நிலையத்தில் தனது வாக்குமூலத்தினைப் பதிவு செய்த பின்னர் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் கருத்துத் தெரிவித்த அவர், "பொத்துவில் தொடக்கம் பொலிகண்டிவரையான எழுச்சிப் போராட்டத்தில் நான் முல்லைத்தீவிலே கலந்துகொண்டமை தொடர்பிலே வாக்குமூலம் ஒன்றினைப் பெறுவதற்காக நேற்று முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டிருந்தேன்.

அவ்வாறு அழைக்கப்பட்டதற்கமைய என்னிடம் அங்கே வாக்குமூலம் பெறப்பட்டது. அந்தவகையில் இந்த போராட்டமானது பொதுமக்கள் சார்ந்து பலர் கலந்துகொண்டு நடாத்தப்பட்ட ஒரு போராட்டமாகும்.

இந்தப் போராட்டத்திலே நான் கலந்துகொண்டதாகவும் பொலிஸார் எனக்கு நீதிமன்றத் தடைக் கட்டளையினைத் தந்ததாகவும் தெரிவித்தனர்.

இருப்பினும் நீதிமன்றக் கட்டளையிலே எனது பெயர் உள்ளடக்கப்படவில்லை என்றும் பொதுவாகவே அக்கட்டளை இருந்ததெனவும் அதனாலேயே குறித்த நீதிமன்றக் கட்டளையினை பெற்றுக் கொள்ளவில்லை என்பதையும் தெரிவித்தேன்.

அத்தோடு அன்றைய சூழலில் எமது மக்களுக்காகவும் எமது மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராகவும் அமைதியான முறையிலே பிறருக்கு இடையூறுகள் ஏற்படுத்தாவண்ணம் போராட்டத்தில் ஈடுபடிருந்ததை வாக்குமூலத்தில் தெரிவித்தேன் என்றார்.

(ம-3)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்ச் Courses (DELF A1, A2, B1, B2)
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma
V. ஜெகன் (Trained in France) (C-1363)
19, பலாலி வீதி, அரியகுளம். 0779 789 456 / 021 221 7781
23\2, சோமசுந்தரம் அவெனியு, சுண்டுகுளி. 0779789456 / 0212219497 கச்சேரி Fuel Station அண்மையில்
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் Work / Student Visa கான IELTS வகுப்புக்கள்.

பயிற்சியுடன் கூடிய தொழில்வாய்ப்பு
எமது நிறுவனத்தில் நாடளாவிய ரீதியில் தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்படவுள்ளது. உங்கள் தகைமைகள் மற்றும் திறமைகள் அடிப்படையில் கொடுப்பனவுகள் மற்றும் சேர்மதிகள் வழங்கப்படும்.
★ 06 மாதங்களுக்கு ஒருமுறை அடிப்படை கொடுப்பனவு அதிகரிக்கப்படும்.
★ வெளிமாவட்டத்தினருக்கு 6 மாதங்களின் பின்னர் அவர்களின் மாவட்டத்திற்கு இடம்மாற்றிக் கொடுக்கப்படும்.
★ O/L ,A/L படித்த இளைஞர்கள், யுவதிகள் யாவரும் தொடர்பு கொள்ளலாம்.
★ நேர்முகத் தேர்வில் தெரிவு செய்யப்படுவர். (5690)
தொடர்புகளுக்கு : 076 808 2241, 077 230 2795

காணி விற்பனைக்கு
பருத்தித்துறை நகருக்கு அண்மையில் தும்பளை வீதிக்கு அருகில் உட்புறமாக 2 1/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (C-1439)
077 436 6704, 077 179 1963

காணி விற்பனைக்கு
செம்மணி வீதியில் நாயன்மார்கட்டு கேணியடியில் 18 பரப்புக் காணி விற்பனைக்கு.
இரண்டு பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும். ( ஒரு பரப்பின் விலை 5 இலட்சம். )
தொடர்பு:- (5691)
077 288 0152
077 505 8561

பதவி வெற்றிடம்
தமிழ் ரைப்பிங், பக்க வடிவமைப்பு மற்றும் விளம்பர வடிவமைப்புச் செய்யக்கூடியவர்கள்(ஆண்கள்) இரவுக் கடமைக்குத் தேவை.
யாழ்.நகருக்கு அண்மையாக உள்ளவர்கள் நேரில் சமுகம் தரவும்.
076 097 3121
பொது முகாமையாளர்,
இல. 03, 02 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-1000/=Kg
பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● புத்தூர் ● கோப்பாய்
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● கிளிநொச்சி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை ● சாவகச்சேரி
(C-1374)
0768226240 DHL

பெண் உதவியாளர் தேவை
Cargills Square வில் (No. 11, 1st Floor, Jaffna.) அமைந்துள்ள Secrets விற்பனை நிலையத்திற்கு பெண் உதவியாளர் தேவை.
தகைமை - A/L or O/L ஆங்கில அறிவு.
வேலை முன்னனுபவம் விரும்பத்தக்கது.
வேலை நேரம் : 10.00 a.m to 7.30 p.m (Monday - Saturday)
தொடர்புகளுக்கு : Priya.G (5683)
077 951 0436, 021 221 6488

அன்னா EXPRESS Courier Service
விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
லண்டன் 1000/= (C-1418)
070 3305500
075 3305500
976, கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.02.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.